உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவூடல் சாரசங்கிரகம்.

62

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1928
MADRAS

கூடலூர், புத்தகக்கடை
திருவாளர், ம. தி. முருகேச முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது.

பிரபவ௵ மேடரவி, ௨௧-திகதி.

All Rights Reserved.

1927 [அணா—5

...s, Madras.

Q23:417
N27
77919

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவுடல்சாரசங்கிரகம்

இது

திருவண்ணாமலை தேவஸ்தானம்

ஸ்ரீலஸ்ரீ பு. சோ. தியாகராஜ ஓதுவாரவர்கள் குமாரர்

நற்சிவகலைகளை நச்சினார்க்கினியர்

ஈசானதேவர் என்னும் தீக்கா நாமம்பெற்ற

பட்டுசாமி ஓதுவாரால்

சத்தியரூபமாகப் பலபிரதிகளைக்கொண்டு

ஒருவாறாராய்ந்து

திரட்டப்பட்டதை,

கூடலூர், புத்தககடை

திருவாளர், ம. சி. முருகேச முதலியாரவர்களின்

வேண்டுகோளின்படி,

சென்னை, முராஹரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1927

இதன் விலை) (அணா—5

பிரபவ௵ மேடாவி உக-திகதி.

ரிஜிஸ்டர் காபிரைட்,

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்;

இந்த "திருவண்ணாமலை திருவூடல் சாரசங்கிரகம்" என்னும் புத்தகத்தை ம-ள-ஏ-ஸ்ரீ ஈசானதேவர் என்னும் தீக்ஷா நாமம்பெற்ற பட்டுசாமி ஓதுவார் அவர்களால் எழுதப்பட்டுளது ஷை புத்தகத்தை நான் சகலசுதந்திரம் பெற்று அச்சிட்டு வெளியிட்டனன் ஆகையால் இப்புத்தகத்தை என் அனுமதியின்றி மற்றொருவர் அச்சிடலாகாதென கனம் கவர்ன்மெண்டார் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அத்துமீறி அச்சிடுபவர்களிடம்சட்ட செக்ஷன்படி நஷ்டத்தைவசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

ம. சி. முருகேச முதலியார்,

புத்தக வியாபாரம், கூடலூர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

ஆரணி போர்டு ஐஸ்கூல் பிரதமபோதகாசிரியர்

ஸ்ரீமத் M. S. மீனாட்சி சுந்தரையர், B. A., L. T.

அவர்கள் இயற்றியது.

அறுசீர் விருத்தம்.

கார்பூத்த நெடுமாலுஞ் சதுர்முகனுங் காண்பரிய
கணக்கிற் சோதிச்
சார்பூத்த தடங்கருணைச் சங்கரியாள் தனியூடற்
சரிதை தன்னைச்
சீர்பூத்த திருவருணைத் தியாகராயப் புனிதன்
செய்த வத்தால்
பார்பூத்த பட்டுச்சாமிச் செம்மல் பைந்தமிழாற்
பகர்ந்திட் டானே.

ஆரணி ஜாகிர் காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் சைவத்திருவாளர்

மு. சுந்தர முதலியார்

அவர்கள் இயற்றிய

அறுசீராசிரிய விருத்தம்.

சங்கரியாள் முன்னொருகால் கொண்டதிரு வூடலினற்
சாரந் தன்னைப்
பொங்கமுற வேசுருக்கிச் செவ்வையுறச் செய்துபலர்
போற்றத் தந்தானை
திங்களுறுந் திருவருணை த்யாகரா யன்புனிதன்
செல்வ னானை
பங்கமில்பட் டுச்சாமி யோதுவா னென்னுமொரு
பாவ லோனை.

ஆரணி போர்டு ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய

திரிசிரபுரம் வித்வான்

திருவாளர் சோ. வீரபத்திர பிள்ளை

அவர்கள் பாடிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூந்தாமம் வணசடிலப் புண்ணியனார் பொருப்பில்வரு
புனித ஞானத்
தேந்தாமென் றிசைபாடு மலர்க்குழலம் பிகையூட
றீர்த்த மாற்றம்
சாந்தாதி குணநிறைந்த தியாகரா யப்பெரியோன்
றவத்தா லீண்டு .
போந்தான்பட் டுச்சாமி யோதுவார் விளங்கநனி
புகன்றார் மன்னே.

வடார்க்காடு ஜில்லா போளூர் தாலூகா, தென்மகாதேவ மங்கலம்
கலைமகள் நிலையத்தாபகர்,

இருத்தகு, திரு. சு. கண்ணபிரான் பாரதியார்

அவர்கள் கூறிய

அறுசீரடி விருத்தம்.

உமையிறைவன் மாட்டடைந்த ஆடலெனு மிக்கதையை
யுலக மாக்கட்
கமைவுறுசங் கிரகமதா யுரைத்திட்டா னருணைநக
ரதனில் வாழ்வோன்
இமையவரும் புகழுரைக்குந் தியாகரா யக்குரிசி
லீந்த செல்வன்
கமைவுறுபட் டுச்சாமி யோதுவா னென்னுமருட்
கண்மை யோனே.

சேயாறு தாலூகா, திருவோத்தூர் முத்தமிழ் ரத்நாகரம்
உயர்திரு ம. தி. பாநுகவி சுவாமியவர்கள்
மாணவர்களிலொருவராகிய,

புரிசைவித்வான் திருவாளர் சு. முருகேச முதலியார்

அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

பாவல்லார் நச்சவரும் பட்டுச்சா மிப்புலவன்
மாவல்லா ளன்வாழ்ந்த வானபதியான்—சேவல்லான்
செம்பதமே பாடுந் தியாகரா யன்மகவாய்
நம்பனடி போற்றும் நலன்.

ஓதுவா ரென்னு முலகுரைத்த சொற்படியே
யோதுவா னாகி யுரைசெய்தான்—ஓதுவார்க்
கெல்லாந் தரவிருக்கு மீசனுக்கும் பார்வதிக்கு
மில்லார்ந்த வூட லினிது.

சேயாறு தாலூகா, அனக்காவூர் தமிழாசிரியர்

திருமிகு கோ. பாலசுந்தர நாயகர்

அவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

திருவளர் கைலை யுருவளர் பெருமான்
வாமம் பயின்ற வளரிளம் பூங்கொடி
முன்னர்ப் பிணங்கிய தன்னிகர் காதை
யிருநில மாக்கள் பெருமித மளாஇ
யாணத் தூற்று மாணிய வேற்கச்
சார மாக வாரம் பயிலச்
செய்தனன் மரைமலர் கொய்குறு நல்லா
ராங்கத னுப்பட் டேங்குச் சுரிமுகங்
காணூஉ வானார் நாணிய பனிமதி
நம்முக மொவ்வா வெம்மையின் மாழ்கி
அங்கி னனந்தலைத் தங்கித் தவம்புரி
கொள்கை யென்ன வெள்குநர் வதியுந்
திங்கள் சிவணிய மங்கல மாட
நிரைபயில் வளஞ்சூழ் தரைபுக ழருணை
நன்னகர் வாழ்வோன் பன்னுறுந் தியாக
ராயப் பெரியோ னுய்தவ மைந்தன்
தேசார்ந் திலகு மீசான தேவ
னவிலுந் தீக்கை நாம மேய்ந்தவன்
பட்டேச் சாமி யோதுவா னலம்புரி
சிவனடி மறவாத் திருவி னன்
பொறையொடு நன்னெறி யுறைபவ னன்றே

சிறப்புப் பாயிரம்
முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அணிந்துரை.

தமிழ் கூறு நல்லுலகத் தறிஞர்காள்!

பூமுகத்தான் நீர்முகத்தான் இருவரும் அன்னமு மேனமுமாய்ப் பல்லூழி தேடியறியாத லிங்கோற்பவ சயிலமெனவும், சங்கற்ப மோக்ஷ ஸ்தலமெனவும் சான்றோரால் போற்றப் பெறும் திருவண்ணாமலையின்கண் திருக்கோயில்கொண் டெழுந் தருளி யிருக்கும்; ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேத, அருணாசலேஸ்வரர்: உத்தராயண புண்ணியகாலமாகிய, மகர ரவி துதிகை திகதியில் பக்தானுக்கிரக காரணமாகக் காட்டியருளும் திருவூடல் மகோற்சவ வைபவ உண்மையினையாய்ந்து தெளிதலை யுன்னி பன்னாட்களாய்ச் சிந்தித்திருக்குங்கால்; எமது அன்பினர் கூடலூர் புத்தக வியாபாரம் திருவாளர் ம. தி. முருகேச முதலியா அவர்கள் திருவூடல் உண்மையினைத் திரட்டிச் சைவ மக்கட்களித்தல் பேருபகார மாமென்று சின்னாட்களாய்த் தூண்டிக்கொண் டிருந்தனர்.

நிற்க; எமக்குப் போதுமான காலமின்மையின் இப்பதி புண்ணியம் நிகழ்தற்குத் தடையாயிற்று. தெய்வீகமாய் இஞ்ஞான்று ஆய்தற்கும், தெளிதற்கும் சாவகாசங் கிடைத்ததாதலின் இச்சிவ புண்ணியப்பேற்றை விரும்பியும், பற்பல சிவ ஸ்தலங்களில் திருவூடல் உற்சவம் நடைபெறுகின்ற காலையில் வாசிக்கும் முறைமையை அவண் சென்று யாம் கவனிக்குங்கால் குளறு படையாகவும், தொடர் பின்மையாகவும் நிகழ்கின்

றதைப்பற்றி, ஊடல் சரிதையைப் பகுத்தும், தொகுத்தும் அவ்வவ்விடங்களுக் கேற்பவிரித்தும், சுருக்கியும், இலை மறை காய்போ லிருந்தனவற்றை விளக்கியும், கத்திய ரூபமாக வேணைய; சிவஸ்தலத்திலுள்ள ஓதுவாமூர்த்திகளுக்கும், மற்றோர்க்கும் எளிதில் பயன்படுமாறு, "திருவூடல் சாரசங்கிரகம்" எனப்பெயர் புனைவித்து இந்நூலுடன் "அருணைத்திருவூடல் மகோற்சவ மாட்சிமை" என்பதொன்றுஞ் சேர்த்து திருவருட் சகாயத்தினை லறைந்து வெளியிடலாயினோம்.

இஃதை; ஆங்காங்கு தேடிச்சென்று பிரதி கிடைத்ததில் பட்ட கஷ்டங்களும், திருத்துவதிற்பட்ட இன்னல்களும் இவ்வளவிற்றென்பது இந்நூலை வாசிக்கும் அன்பர்கட்கு இனிது புலப்படுமென்க.

இப்பனுவலை எழுதுவித்து வெளியிடுவதில் விடாமுயற்சியாய்த் தூண்டியவரான திருவாளர் ம. தி. முருகேச முதலியார் அவர்களின் பேரன்பிற்கும் இத்தகைய சைவ நூற்களைப் பதிப்பிப்பதிலுள்ள நன் முயற்சிக்கும் கைம்மாறாக இந்நூலை யளிக்கின்றோம்.

௬

இன்னும்; இந்நூலினுள் எமது ஆய்வுக்குத் தப்பியிருக்கும் குற்றங்களை நல்லறிவாளர்கள் எடுத்துக் காட்டிடுவார்களாயின் இரண்டாம் பதிப்பில் வெளியிட்டுப் பிரசுரப்படுத்துகின்றோம்.

இங்ஙனம்.

நற்சிவகலைகளை நச்சினார்க்கினியர்,

தி. ஈசான தேவர்,

திருவருணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணைத் திருவூடல் மஹோற்சவ மாட்சிமை.

"உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி
யிலகுமமல ன்சிவமென் பேம்."

சிவத்தைபேணுந் தவத்தையுடைய விபுதர்காள்!

ஸ்ரீமத கண்டாகார நித்தவியாபக சச்சிதானந்த ஸ்வரூப சுத்த சாட்குண்ய பரிபூரணராய், ஆதிமத்தியாந்த சமானதிக நாமரூபகுண ரகிதராய் விளங்காநின்ற, ஸ்ரீ அபீதகுஜாம்பாள் சமேத அருணாசலேசுவரர்: இம்மண்ணுலகிலுய் நெறியறியாது பொய் நெறியிலுழலும் ஆன்மகோடிகளை கடாக்ஷிப்பான் வேண்டி, தேவநாட்களில் முடிவிரவுக் காலமான தனுர்மதி இருபத்தொன்றும் திவசம்முதல் * மகோற்சவங்கொண் டருளுவர்.

இம் மகோற்சவத்தின் நாட்கள் பதினொன்றாகும். அவற்றுள்; முதல்நாள் தூல தீக்ஷத்தையும், இரண்டாம்நாள் தூல

* இம்மகோற்சவம், "புக்தி" எனப்பெயர் பெறும். இஃது; அன்றியும்; "சைவம், சாத்வீகம், பார்த்திவம், ஸ்ரீகரம், சௌக்கியம், பைத்ருகம், கௌமாரம், சாயுத்ரம், சாந்தரம், சௌரம், சாவரம்" எனப்பதினொன்று வகைப்படும். இப்பதினொன்றுக்கும் முறையே; "1, 3, 5,7,9, 12, 13, 15, 17, 21, 48" நாட்களும் உற்சவஞ் செய்வதாம். என்று; முகவிம்பாகமம் சிவோற்சவ படலத்தில் கூறுகின்றது. உற்சவம் என்ற சொல்லுக்குப் பலகருத்துகள் உண்டு. (உத்-மேலான, சவம்-ஐந்தொழில் உத்-ஞானம், சவம்-போகமோக்ஷம்.) மேலான ஞானத்தையும், போக மோக்ஷத்தையுங் கொடுப்பதென்றும், சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ்செய்து ஆன்மாக்களை இரக்ஷிப்பதென்றும், சிவாகமங்கூறுகின்றது.

சூக்கும நீக்கத்தையும், மூன்றாம்நாள் மும்வினை முக்குணம் முக்குற்றம் முப்பற்று முப்பிறப்பு நீக்கத்தையும், நான்காம்நாள் நாற்கரணம் நால்வகைத்தோற்ற நீக்கத்தையும், ஐந்தாம்நாள் ஐம்பொறி ஐந்தவத்தை ஐம்மல நீக்கத்தையும், ஆறாம்நாள் காமாதியாறு கலையாதியாறு வினைக்குணமாறு பதமுத்தியாறு நீக்கத்தையும், ஏழாம்நாள் எழுவகைப் பிறப்பு கலாதிகளேழு மாயாமல குணமேழு நீக்கத்தையும், எட்டாம்நாள் எண்குண விளக்கத்தையும், ஒன்பதாம்நாள் நவபேத விளக்கத்தையும், பத்தாம்நாள் பரமானந்தக் கடலிற்படிவதையும் உணர்த்துவதாம்.

இவைகள் பஞ்சகிருத்திய மெனவும்படும். அவை முதல் நாள் சிருட்டியும், ஐந்தாம்நாள் திதியும், ஏழாம்நாள் சம்மாரமும், எட்டாம்நாள் திரோபவமும், பத்தாம்நாள் அனுக்கிரகமுமாம் இத்திருவூடல் மகோற்சவம் பதினோராம்நாள் தத்துவார்த்தக் காட்சியையும் பஞ்சகிருத்திய ரகசிய தரிசனத்தையும் விளக்குவதென்றறிக.

ஸ்ரீ அருணசலேசுரர் தனுர்மதியில் கொண்டருளும் மகோற்சவத்தின் பத்தாந்திவசமான, மகாரவி உத்தராயண புண்ணிய காலத்திலே இலக்குமிதேவி தக்கன்யாக பங்கத்தை நீக்கிக் கொள்ளும் வண்ணம் பெருந்தவமிழைத்து அருள்பெற்ற, பூமகள் தீர்த்தமென்னும் தாமரைக்குளத்திற்குத் தேவியுடன் எழுந்தருளி, தம்மையண்டின பெத்தர்களுக்குத் தீர்த்தமளித்து மீளுங்கால்: அருகிலிருந்த உண்ணாமுலையம்மை இறைவரை நமஸ்கரித்து போற்றி நின்று, எம் தலைவரே! அடியாள் தக்ஷன் மகள் தாக்ஷாயணி யென்று பிறந்த பழியை விலக்கிக் கொள்வதற்காக, இமயத்திற் சென்று உதித்துத் தேவரீரை மணக்கும் பாக்கியம் பெற்றேன். இப்பொழுது, தங்களது சர்வக்ஞவடிவம்

எனதுள்ளத்தில் சிறிது மறைந்துகிடக்கின்றது. அஃதை; விளக்கமாய் எம் திருஷ்டிக்குப்புலனாகும் வண்ணம், "ஏகபாதத்ரிமூர்த்தி" வடிவத்தைக் காட்டியருளல் வேண்டுமென்று பண்டையநாளில் விண்ணப்பித்தபோது, உத்தராயண புண்ணிய காலமானவின்று காட்சிதருவதாய் அருளினீரன்றோ! ஆதலால்; அவ்வாக்கின்படி, விராட் விசுவரூபத்தை, இன்று புலப்படுத்த வேண்டுமென்று பன்முறைப்பாடித் துதித்தனர்.

அவ்விண்ணப்பத்தினை திருச்செவிச்சாத்தி யருளிய கருணாநிதி ஐயையை நோக்கி, பெண்ணே? வேத சிவாகமங்களால் விரித்துரைக்கப்படும், "ஏகபாதத்ரிமூர்த்தி,' வடிவத்தை, நீ விரும்பியவண்ணமே தேவாதியோர் தரிசிக்க வேண்டுமென்று பன்னாட்களாய்த் தவம்புரிகின்றனர் அவர்களனைவர்க்கும் நாளை யுதயத்தில் தரிசனங் கொடுப்பதாக விருக்கின்றோ மாதலின், "உனக்கும் நாளையே தரிசனந்தருகின்றோம் வருதி" என, உமாதேவியார் சம்மதித்தவராய் பூமகள் தீர்த்தத்தினின்றும் இறைவரோடு திருக்கோவிலுக்கு ஏகாந்தமாய் எழுந்தருளினர்.

பத்தாம்நாளான மறுதினம் உஷற்காலத்தில், ஆதி யெம்பெருமான்; உமைக்கும், தேவர்களனைவர்க்கும், காட்சி தருவதற்குத் திருவுளங் கொண்டவராய், திருக்கோவிலினின்று வெளிப்போந்து, கனககோபுரமண்டபத் தெதிரில் விளங்கும் துஜஸ்தம்பத் தருகிலிருந்தபடி; * நந்தி யெம்பெருமானுக்கு முன்னர்; அவர் விருப்பின்படி, அகில சராசரங்கள் யாவை

---

* இந் நந்தியெம்பெருமான் வரலாறென்னவெனின்? பூர்வத்தில்; "சிலாதர்" என்னும் முனிவர் புத்திரப் பேறின்றி வருந்தி தவமியற்றிக் கண்ணுதலால் யாக பூமியில் நின்று தோன்றிய, குழவியை எடுத்துத் தமது பத்தினியாரிடத்துக் கொடுத்துப் பாலூட்டி வளர்த்து, "செப்யேசுவார்" என்று, நாமகரணமிட்டு வளர்த்து வந்தனர். பின்னர்

யும் தன்னுட்கொண்டதா யிருக்கின்ற, () "விராட் விசுவரூபம்" காட்டியருளினர். அவ்விராட் விசுவரூபம் புடவிதத்துவ காலாக்கினி ருத்திரபுவனமுதல் அண்டங்களை யெல்லாம் ஊடுருவிச் சென்று எல்லைப்படாத நாததத்துவம்வரை விளங்குவதாம். அம்மூர்த்தி அவ்விடத்திற்றானே, சத்திரம் (குடை) இல்லாமல் பிரமாண்டமேனியாய் எழுந்தருளுவர்.

பின்னர்; பரமபதி அவ்வடிவத்தைக்கரந்து தேவர்களுள் நிமித்தம் ○ மும்முத லுருவமடைவர். அக்கால்; மகேசுவரவடிவம்

தாய் தந்தையர் தம்பத்திரராது அற்ப ஆயுளைக்குறித்து வருந்துதலை புணர்ந்து அஞ்சாதீர்கள்; யான் அழியாவரம் பெற்று வருகின்றேனென்று தேறுதல்கூறி; உத்திரவுபெற்றுச் சென்று; அண்ணலை அனேககாலங் கடுந்தவமிழைக்க, சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளி, நித்திய காயந்தந்து பரிசதீக்ஷையைச் செய்து, தமது திருநாமமாகிய, "திரு நந்திதேவர்" என்று திருநாமஞ்சாத்திக் குருசந்தானம் விளங்க, வேதசிவாகமங்களைச் சனற்குமாரர் முதலிய முனிவரர்களுக்கு உபதேசிக்கக் கட்டளையிட்டருளிச் சுயசை யென்னும் கன்னிகையைத் திருமணம் புணர்த்திச் சிவகணங்களுக்குத் தலைவராயிருந்து, தமது திருக்கோயிற் றிருவாயிலினின்று அதிகாரஞ் செலுத்தும்படி சுரிகையும் பிரம்புங்கொடுத்துத் திருமுடி சூட்டியருளினர். அத்திரு நந்திதேவர் அவ்வதிகாரத்தைப்பெற்ற எழுந்தருளினர் என்று; சிவ மகாபுராணம், இலிங்கபுராணம், திருவையாற்றுப் புராணம் முதலியவை கூறுகின்றன.

() இவ்விராட் விசுவரூபத்தை; நமது மணிவாசகப் பெருமான் திருவெம்பாவையில்; "பாதாளமேழினுங் கீழ் சொற்கழிவுபாதமலர், போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே" என்று; கூறியவாற்றானுமுணர்க.

○ மும்முதல் உருவம் என்றது: ஏகபாத த்ரிமூர்த்தி வடிவமென்க: இவ்வடிவத்தை; வாதுளாகமத்தில்; "கர்மே சஸ்ய ஸஹஸ்ராம்சாத் மஹேசஸ்ய ஸமுத்பவ:- மஹேசஸ்ய ஸஹஸ்ராம்சாத் ருத்ர தேவ ஸமுத்பவ:- ஏதம்மஹேச கோட்யம்சாத் ப்ரஹ்ம விஷ்ணுஸமுத்பவ:- தக்ஷிணங்கபவோ ப்ரஹ்மா ஹரிர்வாமாங்கஸம்பவ:" என்றும், காளிகா கண்டம்.

சகத்திராம்சமாகச் சத்திரத்தின் நாப்பண்கூடியதாயும் தக்ஷிண பாகத்தில் கோடியம்சமாக, * அர்ச்சகர் பிரமவடிவாயும், வாம பாகத்தில் கோடியம்சமாக, ஸ்தானிகர் விஷ்ணுவடிவாயும் மகா வைபவத்துடன் எழுந்தருளி; கனகோபுரத் தென்பால், தேவர்கள் துன்பத்தை நீக்கினவரும், சிந்தூரனைச் செயித்தவருமான; சம்மந்த விநாயகமூர்த்திக்குக் காட்சிதந்து; அங்குநின்றும்; நான்காம் ஆவரணத்தில் வச்சிராங்கத பாண்டியனால் கட்டப் பெற்றிருக்கும் திருக்கோபுரவாயிலில்வந்து, பதினொரு கோடி யுருத்திரர்களுக்குத் தரிசனமீந்து; பிறகு: ஐந்தாம் ஆவரணத்தில்: வல்லாளபூபதியால் அமைக்கப் பெற்றிருக்கும் வல்

விஷ்ணுவாக்கியத்தில்; "ஜாதோஹமஸ்ய வாமாங்கே ப்ரஹ்மசைவாஸ்ய தக்ஷிணே" என்றும், ஸ்காந்தத்தில்; "மதங்கஸ்வேத ஸம்பூதௌ ப்ரஹ்மநாராயணுவிமௌ" என்றும், இலிங்க புராணத்தில்: "தக்ஷிணுங்கபவோ ப்ரஹ்மா வாமதச் சஜநார்த்தந:" என்றும், கூறப்படுகின்றன. இம்மூர்த்தம்: பசுக்களின் பாசவீக்கத்தின் நீக்கத்தின் பொருட்டு அணுத்தன்மை நீக்கிச் சிவமாந் தன்மையை, அனுக்கிரகிக்கும் அவசரகோலமாமாதலால்: இம்மூர்த்தியை நமது, காழிநகர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர். திருவெழுகூற்றிருக்கையில்; "இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை" என்றும், திருநாவுக்கரசு நாயனுர். கஞ்சனூர், திருத்தாண்டகத்தில்; "அயன் திருமால் ஆனுனே" என்றும், சுந்தரமூர்த்தி நாயனுர், திருப்பூவணம் பண் இந்தளத்தில்; "திருமால் அயனுலும் உருவுடையார்" என்றும், விதந்தெடுத் தோதினுர்களென்றறிக. இன்னும் இவை போன்ற சான்று பலவுள. ஈண்டு விரிவஞ்சிவிடுத்தாம்.

* இவ்: அர்ச்சகர்; "கலர், அகலர், நம்பூரி, பட்டர், ஆரியர், தேசிகர்" என, அறுவகையர், இவர்களில்; "கலர்" சிவசிரேஷ்டரென்றும், "அகலர், நம்பூரி, பட்டர். ஆரியர், தேசிகர்" என்னு மைவர்களும், கௌசிகர், காசியபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியரென்றும் பஞ்சருஷி சிரேஷ்டர்களென்றும், கூறப்படும். இவ்வறுவகையர்களில்; கலர் மேருவின் வடபால் பிரசித்தி பெற்றவரென்றும், அகலாதியோர் மேருவின் தென்பால் பிரசித்தி பெற்றவர்களென்றுங் காமிகாகமங்கூறுகின்றது. ஈண்டுக்கூறியது: கலரையாம்.

லாள மன்னன்கோபுரத்தெதிரில் வீற்றிருக்கும், () இடபதேவருக்குக் காட்சிதந்து, அங்கு நின்றும்; சிவகங்கை வடபாலுறையும், ஸ்ரீகம்பத்திளையனார்க்குந் தரிசனமீந்து,மீண்டும்; சித்திர மணி மண்டபமென்னும் கிட்டிவாயில் மண்டபத்தின்கண் வெகு ஆடம்பரத்துடன் சூரியோதயகாலத்தில் பிரவேசித்து ஆதித்தமூர்த்திக்குக் காட்சியளித்து, வாகனாரோகண மண்டபமென்னும் பதினாறுகால் மண்டபத்திற்கு எழுந்தருளுவர்.

பின்பு; பரமசிவம் முப்பத்து மூன்றுகோடி தேவர்களுக்கும் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களுக்கும் o கின்னரர், ÷ கிம்புருடர், * சித்தர், p வித்தியாதரர் முதலியகணங்களுக்

() இவ்விடபதேவர் வரலாறென்னவெனின்? பண்டொரு பதுமகற்பத்தில், "வாரணாசி" என்னுந் தலத்திலே, விருஷபரூபத்தையுடைய, "தருமதேவர்" என்னும் ருஷிசிரேஷ்டர் ஒருவரிருந்தார் அவர் அண்ணல் அருள் பெறவேண்டி, தேவவருடத்தில் பதினாயிரமாண்டு தவம் புரிந்தனர், தருமதேவர் பண்ணிய பெருந்தவத்திற்குக் களித்த, "பசுபதி" பிரத்யக்ஷமாகி, "என்ன வரம்வேண்டும்" என்று வினவ, தருமதேவர்மகிழ்ந்து, அடியேனுக்கு; "இப்பிரபஞ்ச வாழ்க்கைவேண்டாம். தேவரீர் எதிர் எக்காலமுமிருந்து தரிசித்துக்கொண்டேயிருக்கும் பெரும்பேற்றையும், தேவரீருக்கு வாகனமாயிருக்கும் பேராற்றலுந்தருதிர்" எனக்கழற, பெருமான் "அவ்வாறே யாகுக" என்று, அளித்து, பாற்கடலிலுதித்த, "நந்தை, பத்திரை, சுரபி, சுசிலை, சுமனை" என்னுமைந்து, பசுக்களையும் மணம்புரிவித்துச் சந்நிதானத்திலே, எழுந்தருளச் செய்தனர். என்று, காசிமான்மியங் கூறுகின்றது. இவரைச்சிலர், திருநந்திதேவர் என்று கூறுவர். அவர் கூற்றுப் பொருந்தாதென மறுக்க. நந்திதேவர் வேறு இடபதேவர் வேறு என்று அறியவும்.

o கின்னரர்—மானுடமுகமுங் குதிரையுடலு முடையவர்.

÷ கிம்புருடர்-குதிரைமுகமும் மானுடவுடலு முடையவர்.

* சித்தர்-சித்திகள் பெற்றோர். அவர் ஆதிநாதர், அநாதிநாதர், கோரக்கநாதர் முதலாயினோர்.

p வித்தியாதரர்-மாலிகாஞ்சன முதலிய வித்தைகளைத் தெரிந்தவர்.

கும்; இன்னும் ஏனைபோர்களுக்கும், காட்சிகொடுத்து: அங்ஙன்; (சென்னை முதலியவிடங்களின் புத்தகக்கடைகாரர்களால் விசேட மண்டபப்படி முதலியன நடந்தேறியதும்) அம்மையாருக்குப் பூமகள் தீர்த்தத்தில் வாக்களித்த முறைப்படி, தரிசனந்தந்தருளு நிமித்தம் மூவடிவு * ஓர்வடிவாய்நின்று, o முத்தொழில்களை யுணர்த்துவான் பொருட்டு, தேவாதியோர் புடை சூழ்ந்துவர திருமதிலை மூன்றுபிரதக்கணம் வருவர். வருங்கால்: முதற்பிரதக்கணத்தில் பிரமவடிவத்தையும், இரண்டாம் பிரதக்கணத்தில் விஷ்ணு வடிவத்தையும், மூன்றும் பிரதக்கணத்தில் உருத்திரவடிவத்தையும், ஏற்று (ஆங்காங்கு அமைக்கப்பட்ட பந்தலில் சர்வோபசாரத்துடன் பூசையை யேற்று) உமாதேவியாருக்குக் காட்சியளிப்பர்.

இம்மூக்காட்சியில், விசுவரூப உருத்திரகாட்சியைத் தந்திருஷ்டிக்கு நன்கு புலப்படும்படி பார்க்கையில், நம்பியினது திருச்சடிலத் துறைந்திருந்த () பாகீரதியைக்கண்டு பிணக்குற்றவராய், ஊடிச்செல்ல, சிவபெருமான்: தனது தோழனுகிய; சுந்தரமூர்த்தி நாயனுரால் தேவிபிணக்கைத் தீர்த்துக்கொண்ட

* ஓர்வடிவு என்றது; "ஏகபாதமூர்த்தி" வடிவையென்க. இவர்: படைக்குங்கால் பிரமனுகவும், காக்குங்கால் விஷ்ணுவாகவும், அழிக்குங்கால் உருத்திரனுகவும விளங்குவர். அன்றியும் இவர் சர்வசம்மாரகாலத்திற் சத்தியில் அனைத்துயிரையும் ஒடுக்கி, பின்னர், அக்காருண்ய சத்தியைத் தம்மிடத்தொடுக்கி, அழியாதிருந்தருளுவர். என்று, சிவாகமங் கூறும்.

o முத்தொழில்-படைத்தல், காத்தல், அழித்தலென்க.

() பாகிரதியைக்கண்டு பிணக்குற்றத்தை; அப்பர்சுவாமிகள். திருமறைக்காடு, திருநேரிசையில். "கங்கைநீர் சடையுள் வைக்கக்காண்டலு மங்கையூட" என்று கூறியவாற்றுனுமுணர்க.

பிறகு; நிமலே விமலனை நிலையத்திற்கு அழைக்க, "பசுபதி" பத்தர்களுக்கு அனுக்கிரகம் தனித்திருந்து செய்வான் வேண்டி மௌனமா யிருந்தனர். அஃதை யுணர்ந்த முக்கண்ணியார் முனிவுற்று ஐயரே! "தாங்கள் மௌனமா யிருப்பதற்கு விடயம் யாதோ? அறியகிலேம் விளம்புதிர்" என, எம்பெருமான் புன்சிரிப்புடனே நாயகியை நோக்கி பெண்ணே! யாம் "பத்தர்களுக்குத் தனித்து அருளல்வேண்டும் பொருட்டும், ஆன்மப் பிரதக்கணஞ்செய்யும் பொருட்டும் கிரிப்பிரதக்கணஞ் செய்யப் போகின்றோம். நீ! எம்முடன் இப்பொழுது வரவேண்டாம்; நிலையத்திற்கேகுதி" என, அம்மை வெகுண்டு மறுமொழிபுகலாது ஆலயத்திற் கெழுந்தருளி, அவண் யாவரும் வரவொட்டாமல் கபாடமிட்டுக் கலக்கத்துடனிருந்தார்.

நிற்க, கண்ணுதல் காமக்கோட்டியைப் பிரிந்து கிரிப்பிரதக்கணஞ் செல்லுகையில்; ஆங்காங்குள்ள அடியார்களுக்கு இன்னருள்புரிந்து, கௌதமருஷி ஆச்சிரமத்தருகாமையில், வேடுவர்புரி மண்டபத்தில், வேடுவர்களுக்கு, அத்திரசத்திராப்பியாசம் அருள் செய்திருக்கையில்: பிரமனொருகால் திலோத்தமை யென்னும் தேவ ஸ்திரீயைச் சிருட்டித்து அம்மாதினது பேரழகால் தாமே வெகுகாலம் மையற்கொண்டு, அவளைத்தொடர அவள் வேண்டிய நியாயங்களைப் புகன்றுங் கேளாததுகண்டு, உடனே பெண்மான் வடிவேற்றோட, நான்முகன் கலைவடிவேற்றுப் பின்பற்ற, அப்பிணை மிக்கபயத்துடன் ஓடிவந்து அருள்செய்யு மண்ணல் சந்நிதியில் அபயத்துடன்விழ, பிநாகபாணி அஃதறிந்து அபயாஸ்தந்தந்து, தம்கணங்களை வேடுவராகும்படிக் குறிப்பாலுணர்த்தித் தாம் வேடுவத் தலைவராய் நின்று, பிணையின் பின்வருங் கலையினது மயக்கத்தை நீக்கும் பொருட்டு, ஞானத்திரத்தைப் பிரயோகிக்க, அக்கலைமோகம் நீங்கி வடிவொழிந்து பிரமனாகி, வேடுவத்தலைவரான, பரமனைக்

கண்டு நடுநடுங்கி, பூர்வத்தில் நான்கொண்ட தருக்கினால் * ஐந்தில் ஒருதலையை யிழக்கப்பெற்றேன். அன்றியும்; () ஆலயமும் பூசையுமிழந்தேன். இக்கால் ஏது நேருமோ என்றுள்கி யச்சமுற்று அந்திவண்ணனைப் பலவாறு வந்திக்க, நம்பன்; மன்னித்துக் காட்சிதந்து வேண்டியவரங்களையீந்தனர். அதைப் பெற்று, அணியண்ணாமலை யென்னுமிடத்தில்வந்து சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்தனன். பிறகு; பிநாகபாணி: பிரமனாதியோர் புடைசூழ ஆலயத்திற்கு ஆடம்பரத்துடன் வருதலாயினர்.

ஆலயத்தில் வந்துற்றதும், அம்மையார் அந்தப்புரத்திற்குச்சென்று பார்க்கையில் கபாடமிட் டிருப்பதையுற்று, நாயகியைவிளித்து, ஏ! நங்காய்? "நீ முனிந்து கபாடமிட்டிருப்பது யாதோ விளம்புதி" என, உமை ஐயரே! நீவிர் எம்மிடத்து சமாதானங் கொண்டபின், ஆன்மப்பிரதக் கணததிற்குச் சென்றீர். அக்கால்; எம்மையுமுட னழைத்துச் செல்லாது நீங்கிப் போயினீரன்றோ! ஆகையால்; அதற்காகக் கோசுகோட்டி நடனத்தைக்காட்டி யருளுவீராஞல் மூனிவை முனிந்துக் கபாடத்தினைத் திறப்பிப்பேம். இன்றேல்; உமதிடத்திற்குச் செல்லுதிர்" என, கைலைபெருமான், "அவ்வாறே யாகுக" என்று தேவாதியோர்களைக் குறிப்பால் நோக்க, அவர்கள் வாத்தியங்களை முழக்க, அவ்வாத்தியங்களுக்கேற்ப முன்னும் பின்னும்

* ஐந்தில் ஒரு தலையை யிழக்கப்பெற்றதை; அப்பர் சுவாமிகள் திருவீழிமிழலை, திருத்தாண்டகத்தில், "அறுத்தானை அயன் தலைகள் அஞ்சில் ஒன்றை" என்று, கூறியவாற்றானு முணர்க.

() ஆலயமும் பூசையுமிழந்ததை அருணாசல புராணத்தில்; "வாச மாமலரவ னுனக்கு மண்ணின்மேல், பூசையுங்கோயிலும் போகவென்றனன்" என்று, வருவதாலுணர்க.

எதிர்முகமாகவே? "கோசுகோட்டி," எனும், திரு நடனத்தைக் காட்டியருளினர். அதைக்கண்ணுற்று அம்மையார் பரவசமாய்க்கூத்தாடித் துதித்து; கபாடத்தினைத்திறந்து, இருவரும் ஏகாந்தமாய் எழுந்தருளி, வேண்டுவோர்க்கு வேண்டியதே யீந்திருந்தனர்கள்.

இவை; . திருவருணையின்கண் பரமபதி கொண்டருளிய திருவூடல் மகோற்சவத்தின் வைபவம். ஆகையால்; இதையொருவாறு சுருக்கி, உலக வழக்குக்கும் நூல் வழக்குக்கும் முரண்பாடின்றி வரையலுற்றேம். சுபம்.

அருணைத் திருவூடல் மகோற்சவ மாட்சிமை
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

* "திருவூடல் சாரசங்கிரகம்."

"கடவுள் வாழ்த்து."

காப்பு.

"ஆடல் சார வரனொ டுமைத்திரு
வூடல் சாரசங்க் ரக முரைத்திட
வீட லானை விளிந்த கரித்திறை
கோட லானையுள் கோடி வணங்குவாம்."

அண்ணாமலைநாதர்.

"கிண்டு தன்மக னோடு மிருபகை
கொண்டெ திர்த்துக் கொலைச்சமர் செய்புழி
யண்ட மேவு மழன்மலை யாயவன்
மண்டு மண்ணா மலையனைப் போற்றுவாம்."

உண்ணாமுலையம்மை.

"சீவர் முற்றுஞ் சிறக்க வளிக்கினு
மேவு கன்னி வியன்பெயர் மேவியே
யோவி லெங்கதை யுகக்கு முண்ணாமுலைத்
தேவி பாதஞ் சிரத்திற்கொள் வாமரோ."

---

* திருவூடல் சாரசங்கிரக மென்பது, பேரழகிற் சிறந்த பெருமாட்டியார் பெருமானுடன், இலீலாமாத்திரையாய பிணக்குற்ற வியல்பைச் சுருக்கமாக நுவல்வதெனப்படும்.

சோமாஸ்கந்தர்.

"கங்கை சங்கமக் காலிற் சரவணத்
திங்கண் வந்த வறுமுக னோடுத்
துங்க மாக்கி யுமையொடு சூழ்தரு
மங்க ணன்ற னடிபணி வாமரோ."

சுந்தரமூர்த்தி.

"எந்தை தன்னை யிரவு விடிவரை
சந்து போக்கியச் சாபத்தி னாலன்னை
தொந்த நீங்கிடத் தூதி னுளைத்திடுஞ்
சுந்தரன் பாதத் தூய்மலர் வாழ்த்துவாம்."

வாழ்த்து.

"வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே."

"அந்தணர் தொகுதிவாழ்க வான்சூழு தழைக்கமாரி
சந்ததம் பொழிகசிவர் கட்டலை யெடுத்திருக்க
யிந்தணிச் சைவமோங்க யெம்பிரா னன்பர்சூழ
சிந்தலி லிறைநூல் ஞானசேவடி வாழ்கமன்னோ."

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவுடல்சாரசங்கிரகம்

நூல்.

திருக்கைலாசச் சிறப்பு.

அநாதி மலமுத்தராய், நித்தியராய், வியாபகராய், எல்லா வறிவும் எல்லா முதன்மையும் எல்லா வநுக்கிரகமு முடைய ராய், ஆன்மாக்களிடத்தே பதிந்த கைம்மாறற்ற பெருங்கருணை யினாலே; "படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்" என்னும், ஐந்தொழில்களையும் இயற்றுதியற்றும் முழு முதற் கடவுளாகிய, "ஸ்ரீ நீலகண்டப் பரமசிவம்" தமது அருட் சத்தியாகிய, பர்வதராஜன் தனயையைப் பாணி பீடனஞ்செய்துக் கொண்டு, உமாதேவியாருந் தானுமாக, ஸ்ரீ கயிலாயகிரியாகிய வெள்ளிமலையி னுச்சியிற் கோடிசூரியோதய மானற்போலொளி வீசும் நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட, வீர சிங்காதனத் தின்பேரில் பக்தாநுக்ரஹ காரணமாக, திருவோலக்கமுற் றிருந் தனர்.

நிற்க; அக்கால், ஹரி பிரமாதி தேவர்களும், பதினொரு கோடி யுருத்திரர்களும், இந்திராதி திக்குப்பாலகர்களும், அஷ்ட வசுக்களும், முதலாய முப்பத்து மூன்றுகோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும், சநகாதி மஹாருஷிக ளுரும், நவசித்தர்களும், கருடகாந்தர்வ சித்தவித்தியாதர யக்ஷ

கிந்நர கிம்புருடர் முதலாகிய பதினெண்கணங்களும், இன்னும் ஏனையோர் யாவரும் சிவபெருமானைத் தரிசிக்கும்படி, திருக்கயிலாயகிரியை யடைந்து, ஆங்கு முதற்பெருங் காவலாயுள்ள, திருநந்திதேவரைப் பணிந்து, அவர் திருவருள் பெற்றவராய் முறை முறைமைய அவர் விடுப்ப மகாசந்நிதானத்தினுட்சென்று, இரு கண்களார எம்பெருமானையும் இறைவியாரையுந் தரிசித்து, அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து, இருவரையும் பிரதக்ஷிணஞ்செய்து, ஒவ்வொரு பக்கத்திலுமுறைந்து, "ஹரஹர சிவ சிவ கங்காதர சங்கர மஹாதேவா" வென்று துதித்து நமஸ்கரிக்கவும், வேதாகமங்கள் கோஷிக்கவும், பூதர்களுட் பலர் நாநா வித வாத்தியங்களை முழக்கவும், பலர் இருபுறத்தும் வெண்சாமரம் வீசவும், வேறுபலர் ஆலவட்டம் அசைக்கவும், பானுகம்பன் ஆயிரம் வாய்களாற் சங்கத்தொனி செய்யவும், வாணாசுரன் சிவார்ச்சனை செய்த ஆயிரங் கரங்களாற் குடமுழா வடிக்கவும், தும்புரு நாரதர்களும், விஞ்சையர்களும், இசைபாடவும், அரம்பையர் நடிக்கவும், இஷ்டகாமியார்த்தங்களைப் பெறவெண்ணினோர் வரங்கேட்டுக் கைமேற்று நிற்கவும், எம்மிறைகளித்து; திருக்கண்சாத்திப்பின் அவரவர்கட்குத் தக்கபடி சிரகம்பன மந்தஹாஸாதிகளான குறிப்புடன் அவரவர்கள் விரும்பினவரங்களை யநுக்கிரகித்து தத்தமிடங்களிற் செல்ல ஆஞ்ஞாபித்து விடுத்தனர்.

விசுவரூபதரிசனம்.

அதன் பின்னர்; அருள்வடிவாகிய அன்னையார் அரியாதனத்திருந்து எழுந்து பணிந்து; சிறிது பொழுது கைமேற்று நின்று, எம்பெருமானே! தேவரீரை அடியாள் சிறிதுகாலம் பிரிவுற்றிருந்த காரணத்தினால், தங்கள் விசுவரூப தரிசனத்தைக் கிஞ்சித்து மறப்புற்றிருக்கின்றேன். அவ்வரிய காட்சி

யினைத் தரிசித்து, 'ஆனந்திக்கும்படி காட்டியருளுக'' எனப் பிரார்த்திக்க கண்ணுதல்; நங்காய்! நீ இமாசலத்தில் மலையரயன் சுதையாகச் சென்றநாள்முதல் நம் பண்டைய நேயங்கள் யாவும் மறந்திருப்பாயோ? என, விறுவி: ஒருவாறு அகங்களிகூர்ந்து, ''அவ்வாறே ஆகுக'' என்று, ''ஒரு திருமுகமும் சந்திரன், சூரியன், அக்கினி என்னும் முச்சுடர்களாகிய மூன்று திருக்கண்களும், கங்கையையும் பிறையையும், கொன்றை மாலையையுஞ் சூடிய சடாமுடியும், சங்க குண்டலத்தையும், தோட்டையும், அணிந்த திருச்செவிகளும் காளகண்டமும், மான், மழு அபயம் வரதம் என்பனவைகளோடுகூடிய நான்கு திருக்கரங்களும், விபூதியினாலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத் திருமேனியும், வெள்ளைப் பூணூலையும், எண்ணிறந்த பிரமவிட்டுணுக்களுடைய என்புமாலைகளையும், பிரமாதியோர் சிரமாலைகளையும், அணிந்த திருமார்பும், புலித்தோலையுடுத்து உடைவாளுடனே கச்சை யுடைத்தாய் விளங்குந் திருவரையும், வீரக்கழலும், சிலம்பும் ஒலிக்கும் செந்தாமரை மலர்போலுந் திருவடிகளும், உடையவராய், தன்னகத்துள் சர்வ சராசரங்களையும் அடக்கி; புடவி தத்துவ காலாக்கினியுருத்திரர் புவனத்திலே, ஆதிகூர்மத்தின் மேனின்று எல்லைப்படாத நாத தத்துவத்தின் அளவாக வுயர்ந்து, விளங்கிய விசுவரூபதரிசனத்தைக் காட்டியருள, சம்பவி; திருக்கண்களாற் றரிசித்து விழியினின்றும் ஆனந்த பாஷ்பஞ் சிந்த, அடியற்றமரம்போலச் சாஷ்டாங்கமாகத் தரைமேல் விழுந்து பன்முறை பணிந்து நின்று கைகூப்பி;

''இறைவனே போற்றிபோற்றி யீசனே போற்றிபோற்றி
யறவனே போற்றிபோற்றி யனகனே போற்றிபோற்றி
துறவனே போற்றிபோற்றி சுத்தனே போற்றிபோற்றி
மறைதுதி நீதாபோற்றி வயிந்திய நாதாபோற்றி.''

"தத்துவ ரூபாபோற்றி தத்துவ வறிவேபோற்றி
தத்துவ வுயிரேபோற்றி தத்துவ முணர்வாய்போற்றி
தத்துவங் கடந்தாய்போற்றி தத்துவா தீதாபோற்றி
தத்துவ மசிபதத்திற் சார்ந்த தத்துவனேபோற்றி."

எனப் பலவாறுகத் துதித்து; ஸ்ரீஅகிலாண்டகோடி பிரமாண்ட நாயகரென்னும் நாமத்திற்கேதுவான ரூபத்தையுங்கண்டேம் கண்டேம், ஆனந்தங்கொண்டேம் கொண்டேம், எனப் பரவசமாய்க் கண்ணீர் ததும்ப, உரோமஞ் சிலிர்ப்பப் பரவசமாய்க் கூத்தாடி நின்றனர்.

சம்வாதம்.

பின்னர்; கண்ணுதலை பாதாதிகேசமளவும் உற்று நோக்குங்கால், கோடிசோமப் பிரகாச வடிவத்தோடு விளங்கும், கங்காதேவியின் ஆனனத்தைக் கண்ணுற்றதும்; இந்துமுக செங்கமலம்போல் வத்திரம் வாட்டமுற்று, ஒருவாறு தெளிந்து; அண்ணலே! தேவரீர் வேற்றணாவுதலை சிந்தியாதவரைப்போல் நடித்ததை யானுண்மையெனக் கருதியிருந்தனம். இன்றுதானுமது அந்தரங்கம் வெளியாயிற்று, நீவிரெய்மீது கொண்டிருந்த விருப்பத்தை, இன்றுதானறிந்தேம். உம்முடைய சூதெல்லாம் நன்குணர்ந்தேம். இதோ உமது சடாபாரத்தில் முடிந்திருக்குஞ் சோர நங்கையாவள்? எனச்சுட்டி முனிவுற்றிசைக்க, உப்பர்பெருமான்: உமையே! எனெம்மீது வெகுளி கொள்கின்றாய்; உமக்கு: எம்முடைய சடிலத்தில் விளங்கும் வடிவம் வனிதையன்று. வெண்ணிறமாகிய அலைகளை மோதுகின்ற தண்புனல் என, அன்னை: ஐயனை நோக்கி, இறைவா? பரிசுத்தமான ஒளியையுடைய திருமுகமும் கருங்கண்களும் செவிகளும் வாயும் நீரிலுண்டோ? என, வினவ; கபாலி: பெண்ணே? முக

முதலியனவாகத் தோற்றுவது புனலிலுள்ள தாமரை, கருங் குவளை, வள்ளிக்கொடி, செவ்வல்லி, நீலோற்பலம் முதலிய மலர்களேயன்றி, வேறன்று என, விமலைமலை வுற்று விமலனை நோக்கி தாணுவே? நீரிணிடத்தே அழகிய தனங்களும் கூந்தலு முண்டோ? என, பிறைசூடி புன்னகையுடன் பருப்பதியே? அப்படி உமக்குத் தோற்றுவது; நீர்க்குமிழியும், பாசியுமே யன்றி வேறில்லை'' என வேத முதல்வி வெகுளி கொண்டு, ஐயன் சென்னிமிசை யுறைகின்ற கங்கையைக் கண்ணுற்று, ''ஆரடி வஞ்சினி'' என்றுறைக்க, சாளுவி புன்னகையோடு ஏன் அம்மே! என்றலும்: ஆலமர்கடவுள் ஞானமுற்று மோனமா யிருந்தனர், அதுகண்டவமலை மனத்தழுக்கங் கொண்டவராய் மணாளனைக் கண்ணுற்று பித்தரோ? நீவிர்; முன்னொருகால்; தேவதாரு வனத்திலுள்ள ருஷிபத்தினிகளுடைய கற்பை யழிக்கும்படி, தேவரீர்: பிக்ஷாடன மூர்த்தியாகத் தேவதாரு வனத்தி லெழுந்தருளி; முனிவரர் வீதியிற் சென்று பண்ணோசையோடு உள்ளாளக்கீதம்பாட, முனி பன்னியர்கேட்டுத் தங்களை வந்து பார்க்கும் சமயத்தில் அவர்களுக்குக் காமநோயையூட்டி, அங்க வஸ்திரம் கைவளையல்கள் முதலியன கவர்ந்தும், நாற்பத்தெண் ணாயிரம் ருஷிமாதர்களிடத்திலே, மாமாயா சாலவித்தைபோல் நாற்பத்தெண்ணாயிரம் புதல்வர்களை யுண்டாக்கி, அவ்வரிவை யவர் பதிவிரதா பங்கமுஞ் செய்தருளினீர். அதையும் யாம் பொறுத்தேம்.

நிற்க; இஃதன்றியும்: நவரத்தினங்களால் அலங்கரித்து, வானமளாவிய மதில்கள்சூழ்ந்த, இலங்கை நகரின்கண் இராவ ணனிட மாளிகைக்குள்ளே, மண்டோதரி மனோபீஷ்டத்திற்காக வெழுந்தருளி, * உல்லாசமாக வார்த்தையாடிக்கொண் டிருக்

* உல்லாசமாக வார்த்தையாடியதை: திருவாதவூரடிகள் குயிற்பத்தில், ''ஆர்கலிசூழ் தென்னிலங்கை யழகமர் வண்டோதரிக்குப், பேரரு

குந் தருணத்தில், அவள் கொழுநனாகிய தசக்கிரீவன் கொலு பிரிந்து, அந்தப்புரத்தில் வரும் சமயத்தில் நீவிர்: ஒருமாய்கை யியற்றினீர். அது யாதெனின்; மண்டோதரியினது மடியின் மீது குழவியாக வீற்றிருந்துகொண்டு, எம்மைச் சிந்திக்க, அக் கால் யாம், தெய்வக்குறத்தி யென்கின்ற வடிவேற்று அங்கு வந் துற்றேம். அப்போழ்து: இலங்கைக்கோமான் துணைவியைக் கண்ணுற்று, பெண்ணே! இச்சேய் யேதெனை, அந்நேரம் அவள்: இக்குறத்தியினுடைய குழந்தை யென்றியம்ப; அஃதுணர்ந்து; எம் குழந்தையைத் தாவென்று கேட்க; இந்தா, "உன்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலம்" என்று, எங்கையிற் தந்தாள். யாமந்நேரம் வாங்காதிருந்தால் நீங்கள் என்னபாடுபடுவீரோ! அறியகிலேம். இன்னுமிவைபோல் பற்பல விடங்களிலும் புரிந்த னவற்றை யோசிக்குங்கால் எமக்கு இலச்சையுறுகின்றது இத் தன்மையாக, மதத்திரியங்களுடைய பசுவர்க்கங்களைப் போலக் காமுகராகத் திரிகின்றீர். அவைகளையும் ஒருவாறு பொறுத் தேம். ஆகையால்; எமக்கெதிரியாக, ஒருகாரிகையைச் சென்னி மிசை யிருத்தி, நடிக்கின்றீர், உமக்குமெமக்கும் சற்றேனும் ஒற் றுமைப்படாது. இனி: நீங்கள் எம்மிடம் வரத்தேவையில்லை. வந்தாலும் கொஞ்சமேனும் இணங்கத் தக்கவளுமல்லேம். நீவி ரிருக்கும் எதாஸ்தானத்திற்கு, எழுந்தருளும் என்று சகல பொருள்களையும் மீறிப் பரித்து, வெகுளியாய் தமது அந்தப்புர மேகி பாங்கியர்களை விளித்து, தகைப்புடனே;

"சேடிகாள்! பரமனாரின் செய்கையை யறிந்து கொண்டோம்
ஊடியே வந்தோ மிங்கு ஒருவரும் வாரா வண்ணம்

ளின்பமளித்த பெருந்துறை மேவிய பிரானை" என்றும், திருவார்த்தை யில்; "ஓங்குமதிலிலங்கை யதனிற், பந்தனை மெல்விரலாட்கருளும்" என்றும், விளம்பிய வாற்றானு முணர்க.

சாடியே கபாடந் தன்னைத் தாள்போட்டு வாசல் தன்னில்
நீடிய காவல் செய்து நில்லுங்க ளென்று எம்மை.''

என்றவுடனே, சகிமார்கள் கபாடமிட்டு, ஆரியை: அருகிற் சென்று அயர்தலை நீக்கவான்வேண்டி, பனிநீர் முதலியவற்றினால் தெளித்து, வெண்கவரியினால்வீசி மலரணையின்மீது கிடத்தினர்கள்.

தாணு விசுவரூபங்கரந்து தன்றோழனை நினைத்தல்.

பிறகு; கங்கைவேணியன் தமது விசுவரூபத்தைக் கரந்து, காமக்கோட்டி வெருளியடைந்து, அந்தப்புரஞ் சென்றனளே! என, ஏக்கத்துடன் சமாதானஞ் செய்வா ரொருவருமிலையே! யென்றும், சற்று நாழிகை யோசிக்குங்கால் நமது ஊடலை: ஆலால சுந்தரனேயன்றி வேறொருவரும் தீர்க்க வாற்றலுடையவரன் றென்றும், சித்தந்தேர்ந்து தமது திருவுளத்தில், ஆலால சுந்தரமூர்த்தியைச் சிந்தித்தார்.

சுந்தரர் அந்திவண்ணன் சந்நிதிக்கு வருதல்.

நிற்க; சுந்தரமூர்த்தி நாயனர்: பரவைநாச்சியா ரில்லத்திலே, உல்லாசமாக விருக்குந்தருணத்தில்; தம்பிரான் தம்மை நினைவுற்றதை யுணர்ச்சியினாலறிந்து: பெண்ணே! எம்மைச் சிவபெருமான் ஆலயத்திற்கு வருக: என, நினைத்துளார். ஆகையால்; யாம் "அவண்செல்ல விடையளிக்குதி" என, பரவைநாச்சியார் துணைவரை நோக்கி, ஏ! நாயகா? நீவிர் சென்றிம்பர் வருங்கால், கண்ணுதலிடத்தில், எமக்குவேண்டிய, "பொன் பூஷணாதிகளைப் பெற்று வருவீராக,'' என்று, விடையளித்

தனுப்ப; சுந்தமூர்த்தி நாயனர் நற்கெஜ வாத்தியத்துடனே சகல சின்னங்களும்;

"நம்பியா ரூரன் வந்தான் நாவலூர் நம்பி வந்தான்
உம்பரா லரிய வெண்ணு வுண்மைக ளுரைப்பான் வந்தான்
செம்பொனுல் மதில்கள் சூழ்ந்த திகழ்செல்வத் திருவா ரூரில்
தம்பிரான் றேழன் வந்தா னென்றன தாரை சின்னம்."

"தென்னவன் சேரன் சோழன் சேவிக்கு மிறைவன் வந்தான்
மன்னிய வால வாயில் வலம்புரிச் சித்தன் வந்தான்
பொன்னனே யாரை யாளும் பொன்னினிற் கிழவன் வந்தான்
என்னையா ளுடையான் வந்தா னென்றன தாரை சின்னம்."

என, ஒலித்துக்கொண்டு, சிவநேசக் குழாத்துடன் சாம்பவமூர்த்தியின் சந்நிதானத்தில் முதற்பெருங் காவலாயுள்ள, திருநந்தி தேவரிடத்தும் ஜெயன் விஜயன் இருவர்களிடத்தும், அனுமதிபெற்று உட்சென்று ஹரா ஹராவென்னும் சப்தத்துடனே அண்ணலை;

வணங்கியே வலமாய் வந்து மாயனர் மலரோன் காணு
விணங்கிய தமிழோர் போற்றி யேத்திடும் பாதத் தானே
மணங்கமழ் மவுலியானே வளரனு மலையு ளானே
யணங்கொளிர் பாகா வென்னை யழைத்தவா றறிகி லேனே.

என்று; பன்முறை நிலமேற் பணிந்து நின்று கை கூப்பி;

குறைவிலாநிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக்காதுடையானே
யுறவிலேனுனையன்றி மற்றடியே
னொருபிழை பொறுத்தாலழிவுண்டே

சிறைவண்டார் பொழில்சூழ்திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடுதுறையு
ளறவனேயெனையஞ்ச லென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே.

அண்டருக் கரியாய்போற்றி யடியவர்க் கெளியாய்போற்றி
வண்டமிழ்ப் பாண்டிநாடு வாழமண் சுமந்தாய்போற்றி
கண்டனக் கினியமேனி காட்டியென் சென்னிமீது
முண்டகத் திருத்தாள்வைத்த முத்தனே போற்றிபோற்றி

எனப் பலவாறுகத் துதித்துக் கண்களில் ஆனந்தபாஷ்பஞ் சொரியும்படி வாய்பொத்திக்கொண்டு அடியேனை யழைத்த வாறு கட்டளையை வகித்தருளவேண்டும். என, நம்பர்; "சுந்தரா! வருதி" எமது முக்கண்ணியார்;

செய்வது சிவனேயென்று தேவியுஞ் சினந்துகொண்டு
கைவளை கனகப்பெட்டி கவரிவெண் குடைகள்பந்தம்
மெய்யுறு முரிமையெல்லா மீறியே பறித்துகொண்டு
கையுற வடியாரோடு நாடியே கோவில்புக்காள்.

என்று கூற; ஆலாலசுந்தரர் ஐயனைநோக்கி இறைவா? "யாது காரணத்தினால் அம்பிகை ஊடலானார்" என, நக்கன் தனது கேளனைக் கண்ணுற்று நாவலூரார்!

சத்திநி பதம்பெறாத சகரர்க ளுய்யவேண்டிப்
பத்தியாய்த் தவம்புரிந்து பகீரதன் நம்மைவேண்ட
வித்தகக் கங்கைவந்த வேகத்தை தவிர்த்துச்சென்னி
வைத்தன மதனாலுன்றாய் வருத்தமுற் றூடலானாள்.

என, நம்பி: நம்பனை யடிவணங்கித் தலைவா? பகீரதன் தங்களை வேண்டி, கங்கையை யழைப்பித்ததையும், அக்கங்கையைச்

சென்னிமிசை யணிந்ததையும், வித்தாரமாக விளம்புதல்வேண்டும். என, பிநாகபாணி: தம்தோழனைப்பார்த்து ஆரூரா?

ஒருகாலத்தில்; அயோத்திநகரை யரசுபுரிந்த சகரன் என்னுஞ் சக்ரவர்த்தி விடுத்த அசுவமேதப்புரவியை, அமரேசன் கண்டு மனம் பொருமுகித் தன் வாழ்வுக்கீனம் வந்ததேயென்று சிந்தை நைந்து வஞ்சனையாற்பற்றி பாதலத்திற் கடுந்தவம் புரியுங் கபிலமுனிவர் பக்கலிற்கட்டிப்போயினன், அம்மன்னவன் மக்கள் அறுபதினாயிரவரும் தந்தை கட்டளைப்படி தரணிமுழுதுந் தேடிக்காணாது, பாரைத் தோண்டிப் பாதலமடைந்து, அரியதவசியாகிய கபிலர் பக்கலிற்கட்டிய பரியைக்கண்டு, இக்கள்வனே நமது புரவியைக் கவர்ந்து காவலன் யாகத்தைப் போக்கக் கருதியவனென்று கனன்று, அவரைத் துன்புறவைத்தனர் அதனால்; முனிவர் முனிந்துவிழிக்க, விழித்தீயினாற் சகரபுத்திரர் அறுபதினாயிரவருஞ் சாம்பரா யழிந்தனர். அச்செய்தியவருடன் போந்ததூதுவர் சொல்லத் தெரிந்த அரசன் தன் பௌத்திரனாகிய, "அஞ்சுமானை" அழைத்து, என் புதல்வரிறப்பினும் எடுத்த யாகத்தை விடலாமோ? என, அஞ்சுமான் பாதலஞ் சென்று கபிலர்முன்னுள்ள சாம்பர்மலையைக் கண்ணுற்று நடுங்கி முனிவர்முன் வந்து குதிரையைக் கேட்க, முனிவர் மனமகிழ்வுற்றுப் புரவியைக் கொடுக்கப்பெற்று, பூவுலகடைந்து பிதாமகன்பால் விடுத்து அவ்வியாகத்தை முடிப்பித்தான்.

நிற்க; அவன் சந்ததியி லொருவனான பகீரதன் பண்டைக் காலத்தில் தன் மூதாதையர் முனிவன் முனிவால்முடிந்து சாம்பராய் நரகத்தில் மூழ்கியுள்ளாரென்று தெரிந்து அவர்களைச் சுவர்க்க மடைவிக்கக் கருதிப் பதுமனைநோக்கிப் பதினாயிரவருடந் தவம்புரிந்தனன். பகீரதன்பண்ணிய பெருந்தவத்திற்குக் களித்த பிரமன் பிரசன்னனாகி, "ஆகாயகங்கை அவர்கள் அஸ்

தியிற்பட்டாற் சுவர்க்கமடைவர், அஃது அவனிமேல்வரின் அதன் வேகத்தை யாற்றுதல் எமக்கே யமையுமன்றி, ஏனையோருக்கே லாதாகலின் எம்மை நோக்கித் தவஞ்செய்க'' எனச் சாற்றி மறைய, பகீரதன் பதினாயிரவருடந் தவம்புரிந்து எம்மருள்பெற்று கங்கையைக் கருதி ஐயாயிர வருடம் அருந்தவம் புரிகையிற் கங்கை பெண்வடிவாகவந்து, "என் வேகமதிகமாதலின் எனைத் தாங்கும்படி, எம்மைநோக்கி இன்னுந் தவஞ் செய்க'' என்றிசைத்து மறைய, எம்மைநோக்கி இரண்டாயிரத் தஞ்ஞூறுவருடம், மீண்டுந் தவஞ்செய்ப, யாம்காட்சிதர, கங்கை பெண்வடிவாகவந்து கூறியதை யெமக்கு விண்ணப்பித்தான். யாம் அக்கால் வந்து காக்கின்றேம். என்று, அளித்த வரத்தைப்பெற்று, திரும்பவுங் கங்கையைக்கருதி இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருடந் தவமிழைத்தனன். கங்கை அப்பொழுது திரிலோகமும் அச்சமுற்று அலறும்படி ஆரவாரித்துக் கொண்டுவந்து தோன்றினள். அவ்வாறு; வந்த கங்கையைச் சிந்தாமற் சடைநுணியிலணிந்தேம்.

அக்கால்; பகீரதன் கங்கையைக் காணமற் கலங்கியிருப்பது கண்டு: ஏ! பகீரதா? எமது சடையி லிருக்கின்றனள், "அஞ்சற்க'' என்று கூறி, ஒரு சடைநுனியிற் சிறுதிவலைவிட கங்கை நதியுரு நண்ணி நானிலத்திறங்கி வேகமாய்ச் செல்லுகையில், ஜந்நுமுனிவர் வேள்விச்சாலையழிய, அவர்கோபித்து, அந்நீரை அங்கையிலேற்றுட்கொள்ள, அரசன் கங்கையைக் காணமல் ஜந்நுமுனிவரைப் பணிந்து விருத்தாந்தத்தை விவரிக்க, அவர் மனமிரங்கிச் செவிவழிவிட, பின்னர்; இறந்துகிடந்த சகரர்களுட லுதிர்ந்த சாம்பரிற்படிய அவர்கள் நற்கதியடைந்தனர். ஆகையால்; மனோவதி நகரத்திலுள்ள கங்கையை, பகீரதன் வேண்டுகோளால் பூமியில் வந்தபொழுது உலகழியாமல் சடையிலேற்றேம். அதனால்;

சுந்தர வரநீகேளாய் சொற்கனி மங்கைநல்லாள்
கந்தமாம் சாந்தத்தோடு களபமு மணிந்துகொண்டு
விந்தையாய் வீதிதன்னில் வார்த்தைகள் மிகவும்பேசி
நந்தமை யூடிக்கோயில் நாடினூடல் தீர்ப்பாய்.

என, பன்முறை புகன்று வேண்டினர்.

சுந்தரர் பொருள்வேண்டி வினவுதல்.

பின்னர்; நம்பியாரூரன் கண்ணுதல் கழலடி பணிந்து நின்று, அடியேன் ஒரு விண்ணப்பம். அது யாதெனில்; யான் தங்களுக்கும், அம்மையாருக்கும் நேர்ந்த ஊடலை விரைவில் தணிவிக்கு மாற்றல் மிகவுளது. ஆதலால்; அவைமுடிக்கும் பொருட்டுத் தேவரீர்!

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்குமெனக்கும்
பற்றாயபெருமானே மற்றாரையுடையே
னுண்மயத்த வுமக்கடியேன் குறைதீர்க்கவேண்டு
மொளிமுத்தம் பூணாரமொண்பட்டும்பூவுங்
கண்மயத்தகத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடனாகைக்காரோண மேவியிருந்தீரென்
றண்மயத்தாலணி நாவலூரன் சொன்ன
வருந்தமிழ்களிவை வல்லாரமருலகாள்பவரே.''

பத்தா பத்தர்களுக்கருள் செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்ற மமர்ந்தவனே
மைத்தா ருந்தடங்கண் பரவையிவள் வாடாமே
யத்தா தந்தருளாயடியே னிட்டளங் கெடவே.''

அளிக்குதிர் என, கைலையாளி; அவ்வாறே மனோபீஷ்டத்தின் படி, பொன்னும், நவரத்தினங்களும், ஆபரணங்களும், பீதாம்

பரங்களும், சகலவாசனைத்திரவியங்களும், வாகனாதிகளும், பிரசாதிக்க, பெற்றுத் தியங்குங்கால்; ஐயன் ஆரூரனைக்கண்ணுற்று காதலா? ஏன் தியங்குகின்றாய் என, நம்பி நம்பனைநோக்கி அண்ணலே! தாங்கள் அளித்தபொருள்கள் பெரிதன்று இதை விரைவில் எமது பரவையாரில்லத்தில் சேர்ப்பிக்கும்படி அருள் புரிக'' என, கண்ணுதல்: "அவ்வாறே செய்விக்கின்றோம்,'' என்று, அருகிலிருந்த பூதங்களுக்குக் கட்டளையளிக்க, அக் கட்டளையைப் பூதர்கள் தாங்கி பரவையாரில்லத்தில் சகல பொருள்களையும் விரைவில் சேர்ப்பித்து வந்தார்கள் அப்பொருள்களைக் கண்ணுற்ற, பரவைநாச்சியார், ஐயனையுந் தலைவனையும், அகங்களித் தின்புற்றிருந்தனள்.

நிற்க; பின்னர்: ஆலாலசுந்தரர் ஐயனால் விபூதி பிரசாதம், திருமாலை பரிவட்டம் முதலியன பெற்றணிந்து, பன்முறை சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய் தெழுந்து இருகரங்களையுஞ் சென்னிமேற் கூப்பி;

நித்தனே நிமலனே நிகழ்நின் றுமைனே
அத்தனே யடியவர்க் கெளிய வண்ணலே
பித்தனே யாதியந் தங்கள் பேசொணு
முத்தனே யுயிர்தொறு மூலாய முன்பனே.

ஒருவனே போற்றிபோற்றி யொப்பிலாய் போற்றியெங்கள்
குரவனே போற்றிபோற்றி கூனவெண் பிறையாய்போற்றி
யருவனே போற்றிபோற்றி யருவுரு வானாய்போற்றி
சரவண பவனைப்பெற்ற சங்கரா போற்றிபோற்றி

எனப் பலவாறாகத் துதித்துக் கண்களில் ஆனந்த பாஷ்பஞ் சொரியும், நாவலூரனைநோக்கி, நம்பர்: "நீ! விரைவில் நிமலை நிலையத்திற்குச் சென்று, ஊடலைத் தவிர்த்து, இவணழைத்து வருதி'' எனக் கட்டளையிட்டருள; ஆரூரன் அக்கட்டளையைச்

சிரமீதேற்று: வணங்கி சாம்பவி சந்நிதானத்திற் கெழுந்தருளினர்.

சுந்தரர் அம்பிகை சந்நிதிக்கு வருதல்.

தம்பிரான் தோழன்: தருமச்செல்வி ஆலயவாயிலின்கண் வந்துற்று;

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக்காடரோ
கண்ணிநா லுமைக்காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

என்று, பன்முறை கதற, அக்கதறலைக் கேள்வியுற்ற, ஜயைவிஜயை எனுமிருவர்களும் வந்து, கபாடத்தினைத்திறக்க, அவ்விருவராலும், உத்தரவுபெற்று, அன்னையார் சந்நிதியிற் சென்று, பன்முறை பிரதக்கண நமஸ்காரம் புரிந்து;

அருளுருக் கொண்ட வெங்க ளன்னையே யுலகுக் கெல்லாம்
பொருளுயி ருடல்கள் மூன்றும் பூவினி லுனக்குத் தந்து
அருள்மிகு மனத்தி னாலே பாடினே னம்மை நின்னை
தெருள்தரு மருணை வாழுந் திருவுண்ணா முலையி னானே.

வேத முடிமே லானந்த வுருவாய் நிறைந்து விளையாடு
மாத ரரசே முத்தநகை மானே யிமய மடமயிலே
மாத ரிமவான் றேவிமணி வடந்தோய் மார்புந் தடந்தோளும்
பாத மலர்சேப் புறமிதித்து விளையாட் டயரும் பரிசென்னே.

என்று, பாடித் துதிசெய்து, அன்புவலைப்படும் பெருங்கருணைப் பெருமாட்டியாகிய, உருத்திராணி: ஆலால சுந்தரமூர்த்தியைக் கண்ணுற்று, ஏ! எறார்ந்தோன் கேளாய்? "நீ அனேகமான சிவனடியார் குழுமலுடன் சென்று, சிவதரிசனஞ் செய்வதைவிட்டு இவணடைந்த காரணம் விளம்புதி" என, நாவலூரான் பார்ப்பதியை யடிவணங்கி;

தாயினும் நல்லாய் போற்றி தலைமூத லுடையாய் போற்றி
வேயிலே வளர்ந்த வீசன் வெய்யலில் வருந்தி நின்று
காயமே பொன்ன தாகக் கண்டமே கருப்ப தாகச்
சாயலே வேற தாகத் தயவுட னழைக்கச் சொன்னார்.

என, நிமலே வெகுண்டு, சுந்தரா? எம்மை, "உம் ஈமத்தாடி அழைத்த காரணம் புகலுதி" என, பரவை கேள்வன் அம்மையை யடிபணிந்து; அன்னையே, "தாங்கள் பினாகபாணியார் இடப் பாகத்தி லெழுந்தருளி யிருப்பதைவிட்டு, பாகீரதியைச் சடா முடியில் முடிந்திருப்பதற்குச் சினந்து வந்துவிட்டதாகவும், அச்சினத்தைத் தவிர்ப்பான்வேண்டி, எம்மை விடுத்துளார். அதலால்; "தேவரீருக்குத் துணைவரும் அடியேனுக்கு ஆவலருமாகிய, கண்ணுதல்மீது உண்டாகிய, கடிதலைக்களைந்து, கபாலி சந்நிதிக்கு வருவீர்" என, மலைமகள்; மணவாளன் தோழனை நோக்கி;

கேட்டிநீ! நாவ லூரா? கேடறு மிறைய னார்தாம்
ஈட்டுமொக் கணத்தைக் கொண்டா ரெதிர்புலி யுரிவை போர்த்
ஆட்டர வெடுத்தா ரங்கை யனன்மழு வேந்தி நின்றார் (தார்
மாட்டுறு பூத ரோடு மருவினா ரக்குப் பூண்டார்.

கொக்கிற கணிந்தார் மன்றல் கூவிளம் புனைந்தா ரன்னை
மிக்கவந் தகனைக் காலால் வீழ்த்தினர் கடுக்கை வேய்ந்தார்
தொக்கறு குடனா மத்தைச் சூடினார் மதிய ணிந்தார்
நக்கராய்ப் பலிகொண் டுற்றார் நலிவிலே றூர்ந்தா ரன்றே.

முயலகன் றனைமி தித்தார் மொய்குழ லரிவை யார்த
மயலடைந் தரிய கற்பை யழித்திட்டா ராமை யோடும்
வியனுறு கேழற் கோடு மீன்விழி தானும் பூண்டா
ரியல்பிணி லீம நாடி யெழினடம் புரிந்தா ரன்றே.

வெள்ளெலும் பணிந்தார் வீறு தலடியிணை யெச்சிக் கொண்டா
ரெள்ளலா யெருக்கும் பூண்டா ரியல்பஞ்ச வடிய ணிந்தார்
கள்ளமா யிறைச்சி தின்று கடிநிருள் தூது போனார்
தெள்ளிய வவர்தஞ் சீர்த்தி தெளிகிலாய் போது மாதோ.

இவைகளன்றியும்; எமக்கெதிராக வொருவனிதையைச் சடா மகுடத்தி லணிந்துளார். அவள் பதின்மடங் கதிகமாயிற்று. நான் கடைப்பட்டேன். ஆகையால்; நான் அங்கு வருவது நியாயமன்று. "நீ! ஆண்டேகுதி" என, முனிந்திசைப்ப; கண் ணுதல் தோழன் கலக்க முற்றவராய், அம்மையாரை யஞ்சலி புரிந்து, உமையே! "உமது மணவாளர் மனவியாகு முற்றிருக் கின்றார். விரைவில் சகல சீற்றத்தையு மொழித்து விடையோன் சந்நிதிக் கெழுந்தருளுதிர்" என, அஃது; அபிராமணி திருச் செவி யேற்றதும், கறுவுகொண்டு, அருகிலிருக்கும் பாங்கியர் களை நோக்கி, அணைவிகாள்?

கள்ளனார் சொன்ன வார்த்தை கனவிலுஞ் சொல்ல வேண்டாம்
தள்ளடி மாதே கூடி தகருங்கை வாழை தன்னால்
அள்ளியே யெரியுஞ் சாந்தா லணிமணி விசிறி தன்னால்
வெள்ளிய சாம ரத்தால் மிகமிக வடியு மென்றாள்.

உடனே சேடிகள்; புனுகு சவ்வாது கஸ்தூரி கலந்த சந்தனக் குழம்பினாலும், வெண்சாமரத்தினாலும், விசிரியினாலும், வாழை மட்டையினாலும், புட்பச் செண்டினாலும், ஆலால சுந்தரனை அலைத்தப்புறந் தள்ளிவிட்டதும், பரவை கொழுநன் எழுந்து சக்தியற்றவராய், தாணுவின் சமூகத்திறகு வருதலுற்றார்.

சுந்தரர் அந்திவண்ணன் சந்நிதிக்கு வருதல்.

ஆலால சுந்தரமூர்த்தி; ஆலயர் கடவுள் முன்தோன்றி பிர தக்ஷிண நமஸ்காரம்பண்ணி, அஞ்சலியுடனே;

உடலைத் துறந்து லகேழுங் கடந்துல வாததுங்பக்
கடலைக் கடந் துய்யப் போயிட லாகுங்கனக வண்ணப்
படலைச் சடைப் பரவைத் திரைக் கங்கைப் பனிப்பிறைவெண்
சுடலைப் பொடிக் கடவுட் கடிமைக் கட்டுணி நெஞ்சமே.

திங்கடங்கு சடையின் மேலோர் திரைகள் வந்து புரளவீசுங்
கங்கை யாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறு தாரி
யங்கை வேலான் குமரன்பிள்ளை தேவியார் கோற்றட் டியாளா
ருங்களுக் காட்செய்ய மாட்டோ மோண காந்தன் றளிபுளிரே.

என்று, வந்தித்து; ஐயனே! தேவரீர் அத்தியுரித்துப் போர்த்தீ ரென்றும், அரவமணிந்தீரென்றும், சுடலை யாடினீரென்றும், கங்காளமணிந்தீரென்றும், மீன்கண் அணிந்தீரென்றும், வெண் டலையி லுண்டீரென்றும், பன்றிகோடு தரித்தீரென்றும், கமட வோடு தரித்தீரென்றும், கொக்கிறகு தரித்தீரென்றும், புலி யாடை தரித்தீரென்றும், அங்கையில வீணை தண்டங்கொண்டீ ரென்றும், கங்கையைச் சென்னிமிசை முடிந்தீரென்றும், இவை போன்றனைய வைகளைச் சூடினீரென்றும், இகழ்ந்துபேசி; நான் அங்ஙன் வருவதற்கியலாது. "நீ செல்லுதி" எனப்புகன்ற காலையில் அடியேனை;

பாங்கிகள் பலருங் கூடி பந்தெரி விளைக ளாலு
மோங்குசா மரந்தன் னாலு முழல்மணி விசிறி யாலுங்
கோங்குசேர் மாலை யாலுங் குங்குமக் குழம்பி னாலும்
வீங்கவே மிகவெ ரிந்தார் வேகமாய் வந்தே னையா.

ஆதலால்; உங்களுக்குச் சமாதானஞ் செய்ய, ஆற்றலுடைய வன் நான் அன்று. என, வேண்ட, கைலையாளி; தம்கேளனைக் கண்ணுற்று, ஏ! பரவைமணவாளா? "நீ அம்பர் விளம்பியதைப் புகன்றெலா மெமக்குளதே ஆனால்; அவைகளெல்லாம் அநாதி

மலபெத்தர்களாகிய, ஆன்மாக்கள் பொருட்டேயன்றி எம்பொருட்டன்று.'' ஆகையால்; நீ,

இன்னொருக் காலங் கேபோய் யேந்திழை பக்கல் சென்று
சொன்னது பொருக்க வேண்டுஞ் சுரிகுழல் மாதே யென்று
பன்னிய பழமை யெல்லாம் பலபல வகையே சொல்லி
முன்னுற வணங்கி நின்று முதல்வியை யழைத்தி டாயே.

என, நம்பியாரூரன் நம்பனை பன்முறை பணிந்துநின்று கை கூப்பி;

அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
யெங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி.

நாரணற் கரியாய் போற்றி நான்முக னறியாய் போற்றி
யாரணப் பொருளே போற்றி யதினுறை மறையே போற்றி
காரணத் தருளே போற்றி காரணங் கடந்தாய் போற்றி
பூரணத் தனியே போற்றி புதுவைநா யகனே போற்றி.

எனத் துதித்து, அண்ணலால் அம்பிகையா ரில்லஞ்செல்ல விடைபெற்று எழுந்தருளி வருவதானார்.

சுந்தரர் சாம்பவி சந்நிதிக்கு வருதல்.

பரவை மணவாளன் பார்ப்பதி சமுகத் தெழுந்தருளி, வணங்கி நின்று கண்ணீர் சொரிய நாக்குக்குழற, இருகை குவித்து;

ஒளியா லுலகின் றுயிரனைத்து மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கு மங்கயற்க ணன்னே கன்னி யன்னமே

அளியார் விமவான் றிருமகளா யாவி யன்ன மயில்பூவை
தெளியாமழலைக்கிளிவளர்த்து விளையாட்டயருஞ்செயலென்னே

அண்டக்குவைவெண்மணற்சிறுசோ றாக்கித்தனியேவிளையாடுங்
கொண்டற் கோதாய் படிவெழுத லாகா வுருவக் கோகிலமே
கொண்டற்குடுமிமிமையவரை யருவிகொழிக்குங்குளிர்முத்தால்
வண்டற்குதலைமகளிரொடும் விளையாட்டயரும்வளப்பென்னே.

என்ப்பாடித் துதித்துச் சமயமுதல்வியை யுற்று நோக்கி;

அன்னையே யனக மாதே யறிவினி லெனக்குத் தாயே
புன்னைசேர் குழலி னாளே போற்றியே போற்றி போற்றி
கன்னிசே ரருணை நாதர் கடிமலர்ப் பதந் துதித்து
உன்னையே மிகவி ரும்பி யோடியே யழைக்கச் சொன்னார்.

என்ன; உருத்திரை நக்கன் நண்பனைப் பார்த்து நம்பீ? "யாம் உமதிடத்தில் விளம்பிய விடபாதிகளை, உம்மூர்த்திக்குப் புகன் றீரோ! அவர் யாது கிளத்தினர்" என, தம்பிரான்; தருமச் செல்வியே? உங்கள் காதலர் அவைகளையெல்லாம் ஆன்மாக்களி னீடேற்றத்தின் பொருட்டேயன்றித் தன்பொருட்டன்றென்று கூறினர். ஆகையால்; 'சினத்தைத் தணித்து இறையோன் சந் நிதிக்கு, எழுந்தருளுதிர்" எனப்பன்முறை வேண்டி வணங்க, மலைமடந்தை பெருங்கோபங்கொண்டு, சுந்தரா? முன்கூறியது மன்றி, உமது பித்தனார்;

நட்டமே யிட்டுக் கொண்டார் நாள்தொறு மிறைச்சி தின்றார்
வெட்டது பட்டார் பார்த்தன் கைவில்லா லடியும் பட்டார்
செட்டது செய்வார் போலத் தென்னன்முன் நரியை விட்டார்
பிட்டது தின்றார் வார்த்தை யென் முனே பேசிடாதே.

கடல்விட மமுதாக் கொண்டார் கல்லினற் பிரம்பி னாலு
மடல்பெற வடியும் பட்டா ரலையிலே வலையைப் போட்டார்

திடமிகு விறகை விற்றார் செய்யமா ணிக்கம் விற்றார்
மிடலுற மண்சு மந்தார் வேண்டிய செய்தா ரந்தோ.

அன்றியும்;

சங்கிலி பரவைக் காகத் தாமொரு தூது சென்றார்
கங்கையைத் தரித்து நின்றார் காவினில் முனிவர்க் கன்பாம்
மங்கையர் மயங்கச் செய்தார் வளையலும் விற்று வாழ்ந்தார்
சங்கரன் தொண்டன் றன்னைத் தள்ளிடர் தள்ளி டாரே.

என, வாய்பொத்து முன்னரே அருகிருந்த நாவலூரனை;

தள்ளுங்க ளென்ற வார்த்தை தாதியர் கேட்கா முன்னம்
கள்ளமாய்த் தூது வந்த கங்காள னடிய னுரை
யெள்ளிய வாழை யாலு மேற்றதோர் சிவிறி யாலும்
வெள்ளைச்சா மரத்தி னாலு மடித்தனர் விரட்டி விட்டார்.

உடனே, பரவைமணவாளன் சஞ்சலங்கொண்டு, திகைப்புடன் திரியம்பகன் சந்நிதிக்கு வருதலுற்றார்.

சுந்தரர் பசுபதி சந்நிதிக்கு வருதல்.

நம்பியாரூரன் நம்பன் சமுகத்திற்கு வந்து, வலஞ்செய்து அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டுக் கூத்தாடி, ஆனந்த அருவிசொரிய அஞ்சலி செய்து நின்று;

அந்தணாளனுன் னடைக்கலம்புகுத
அவனைக்காப்பது காரணமாக
வந்தகாலன் றனாருயிரதனை
வௌவினுக்குனை றன் வன்மைகண்டடியே
னெந்தைநீயெனை நமன்றமர்கலியி
லிவன்மற்றென் னடியானெனவிலக்குஞ்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே.

கடவுளே போற்றி யென்னைக் கண்டு கொண்டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட வேண்டும் போற்றி
யுடலிது களைந்திட் டொல்லை யும்பர் தந்தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி.

எண்ணிய வெண்ணி யாங்கே யான்பெற முடித்தாய் போற்றி
பண்ணியன் மறைகடேறும் பான்மொழி மணாள போற்றி
புண்ணியர் தமக்கு வேதப் பொருளுரை பொருளே போற்றி
விண்ணிழி விமான மேய சுந்தர விடங்க போற்றி.

எனத் துதிக்க; உம்பர்பெருமான்: அகங்களிகூர்ந்து கேளனை நோக்கி, நம்பி! "நிமலை நின்னிடம் யாது? புகன்று விடுத்தனளாள், அதை விரைவில் விளம்புதி" என, பரவைதுணைவன்: மரகதவல்லி காந்தனை மனமுருகித் துதித்து அம்மாலே! நீவிர், இறைச்சி யுண்டீரென்றும், பிட்டுண்டீரென்றும், விடமுண்டீரென்றும், வில்லடிபட்டீரென்றும், கல்லடிபட்டீரென்றும், பிரம்படிபட்டீரென்றும், வெட்டிப்பட்டீரென்றும்; விறகு விற்றீரென்றும், வலைவீசினீரென்றும், வளையல் விற்றீரென்றும், மாணிக்கம் விற்றீரென்றும், மண்சுமந்தீரென்றும், மங்கையர்களை மயங்கச் செய்தீரென்றும், கங்கையைத் தரித்தீரென்றும், இன்னு மிவைபோன்ற பற்பல காரியங்களையுஞ் செய்தீரென்றும், உதாசினத்துடன் சாற்றுகின்றார்கள். அன்னோர் எம்முடைய, இன்சொல்லை ஏற்குதலுமின்றி, இகழ்ச்சியுடன் ஏசுகின்றார்கள். ஆகையால்; எம்மைத் தாங்கள்:

ஆவலா லனுப்பச் சென்றே னன்பர்க்குக் கொஞ்ச மில்லை
காவிபோல் விழியார் சொல்லக் கனக்கவு மாதி மார்கள்
போவென வடித்தார் தள்ளிப் புரட்டினர் தூற்றி விட்டார்
ஆவியோ டிங்கு வந்தே னவமந்தேன் மிகவு நொந்தேன்.

என, ஓலமிட்டு வருந்தி; சுவாமி!

அன்றுநீ ரடிமை கொண்ட வருமைக ளறிந்தீ ரில்லை
யின்றுநான் பட்ட பாடு விறைவனே போதும் போதும்
மன்றுனி லாடு வாரே வருவது மில்லை யென்றாள்
சென்றுமை யடியேன் சொல்லத் திருவுள மறியு மென்றார்.

என, அரவாபரணன், ஆரூரனைப் பார்த்து, நண்பா? ஏன் கலக்கமுற்றாநின்றாய் என, நம்பி: நம்பனையுற்று ஐயனே? "உங்கள் ஊடலை ஆற்ற யான் உரியவனன்று. எம்மை எம்மில்லத்திற்குச் செல்லவிடுக்குதிர்'' என, கைலைபெருமான் கோனை நோக்கி, ஏ! சுந்தர?

அன்றுனக் கரிய நாமும் சங்கிலி பரவைக் கன்பாய்
சென்றினைக் கூட்டஞ் செய்தோம் செய்தியை மறந்துவிட்டாய்
நன்றியை யுளத்துக் கொண்டு நமது சொல் லைத்தள் ளாது
யின்றுநீ யுமையி டம்போ யிக்கணம் வரச்செய் வாயே.

என, பரவைமணாளன்: அண்ணலே! அடியேன்; தேவரீர் சித்தத்திற்கும் வெறுப்பானேன். அம்மையரார் சித்தத்திற்கும், வெறுப்பானேன். தங்கள் கட்டளைப் பிரகாரம் நடந்துக்கொள்ளச் சித்தமா யிருக்கின்றேன்'' என, வேண்டி விண்ணப்பம் புரிந்தருள. சூல பாணி; தம்பிரானைப் பார்த்து;

ஏன்பெறு நாவ லூர! வின்றுநீ யுமைபால் சென்று
திண்பெற நீயி யம்புஞ் சிறப்புடைத் தேவா ரத்துப்
பண்தனை யோதி யிங்ஙன் பரமனா ரழைத்தா ரென்று
உண்மையா யழைத்து வந்தா லுள்ளமு மகிழ்வேன் மாதோ.

என, ஆலாலசுந்தரர்; கொன்றை சூடியி னடிபணிந்து நின்று இரு கைகளுங் குவித்து;

ஆக்கையை யின்றி யாக்கை யாக்கிடு வானே போற்றி
நோக்கினை யின்றி யெல்லா நோக்கிடு வானே போற்றி
நாக்கினை யின்றி வேத மாதிநா னவின்றாய் போற்றி
யூக்கமா ருள்ள மின்றி யனைத்தையு முணர்ந்தாய் போற்றி.

எனப் பலவாறு வந்தித்து, விடைபெற்று பகவதியார் பவனத்திற்கு ஏழுந்தருளி வருதலுற்றார்.

சுந்தரர் கௌரி சந்நிதிக்கு வருதல்.

நம்பியாரூரர்: மூக்கண்ணியார் முன்தோன்றி பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணி எழுந்து சென்னிமிசை கை குவித்து;

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
வங்கயற்க ணம்பி ராட்டி,
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

எனப் பன்முறை துதித்து; மலைமகளை நோக்கி: என தன்னையே?

உற்றமை சேர்வது மெய்யினையே
யுணர்வது நின்னருண் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே

யற்ற மறைப்பது முன் பணியே
யமரர்கள் செய்வதுமுன் பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரமபுரத்தை யுகந்தனையே.

சத்திக ளுருவாய் நின்ற தாயுன தருளா லெல்லாம்
புத்தியா லறிந்தால் ரூபப் பொலிவுடன் தோன்றி நிற்பாய்
அத்தனுக் குன்னைப் பிரிந்த வல்லலை நீக்க வாரீர்
சித்தநீ பிணங்கி நின்றால் சிவனுரா லாவ துண்டோ.

“வருதிர் வருதிர்” எனப் பன்முறை வேண்டி வணங்க; உருத்திரை உருத்திரமூற்று, ஏ! விடையூர்தி தோழா?

ஒருகாலத்தில்: திருக்கயிலாயகிரியில் யானும் உமது காதலருந் திருவோலக்கமுற் றிருக்கையில்; திருமால், பிரமன், இந்திராதி திக்குப் பாலகர், அஷ்டவசுக்கள், சப்தருஷிகள், நவசித்தர்கள் கின்னர கிம்புருட யக்ஷ வித்தியாதராதி, அஷ்டாதச கணங்கள், துவாதசாதித்தர் முதலிய கிரகங்கள் இன்னும் இமையவா யாவரும் எங்களிருவர்களையுந் தரிசித்து, அஷ்டாங்க பஞ்சாங்க மாகப்பணிந்து பிரதக்ஷிணஞ் செய்து, தங்கள் தங்கள் குறைகளைச் சொல்லி யாசித்து, எங்களிருவராலும் அதுக்கிசைந்த வரங்களைப் பெற்று வருகையில், அப்பொழுது; ருஷி சிரேஷ்டர்களில் மேலானவராகிய; பிருங்கி ருஷியானவர், எம் மையாத்திரம் பணியாமல் சிவபெருமானை மாத்திரம் பணிந்து பலவகையாகப் பாடிப் புகழ்ந்துவந்தார். அவ்விதம் நிகழுங்கால்: அம்முனிவனுடைய, ஆற்றலை யறிவான்வேண்டி, தவமிழைத்து, இறைவனன் வாமபாகத்தில் எழுந்தருளினம், அக்கால் அம் முனிவன் ஓர் வண்டுருபமெடுத்து, எங்களிருவர்களுடைய நாபி

யுட்புகுந்து, கண்ணுதலை மாத்திரம் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கூத்தாடினான்.

அக்கால்; யாம் அம்முனிவனை நோக்கி நீ! யாவன்? எம்மைச் சிறிதும் மதித்திலாய்? என்று முனிந்து, சத்தியாகிய எமது கூறுகவுள்ள உதிரமாம்சங்களை அவருடலிற் சிறிது: மின்றி, ஆக்ராணித்துக்கொள்ள, அவன் சிவ கூறுகவுள்ள, என்னையும் நம்மையுமே உட்கொண்டதோற் பதுமைபோலத் தள்ளாடி நின்று, தாணுவைப் பிரார்த்தித்ததும், அதுகண்ட காலாரி மனந்தரியாராகி; ஓர் காலையுதவ, ப்ருங்கிமுனி களித்து மூன்றுகாலுடன் முன்னின்று கூத்தாடிப் பலவகையாகப்பாடிச் சென்றான். அப்பொழுது: யாம் உமது, இறைவோன்மீது ஊடிக் கொண்டு நிலைய முற்று நிலைகலங்கி, இருந்தனம்.

பிற்கு; சிலகாலஞ் சென்றபின்பு: இலங்கைக் கோமான் அளகையாளியினுடைய, புட்ப விமானத்தைக் கேள்விப்பட்டு, அன்னானிடஞ் சென்று கலாம் விளைத்து வெற்றிபெற்று, புட்ப விமானத்தின்மேல் ஆரோகணித்துத் தன் தேசத்திற்குத் திரும்பிவருங்கால், ஆயிரங்கொடுமுடிகளையுடைய, இக்கயிலாயத்துச் சிக்கு நேராகவர, அவ்விமானந் தடையுற்று நின்றது. அது கண்ட தசக்கிரீவன் மனங்கலங்கி, சற்றுலோசித்து, இச்சயிலத்தில் எந்த ஞபோதனனோ! நம விமானத்தை நிறுத்தினார்கள். என்று, வெகுண்டு; இறங்கி மலையடிவாரத்திற் சென்று, நகிரத்தைத் தன்னிருபது கரங்களாலும் பற்றியசைத்துப் புயத்தி * லெடுத்தான். அப்பொழுது; யாம் அஞ்சி அறியாமையினால்

* எடுத்ததை; வாகீசப்பெருந்தகையார்: குடமூக்கு, திருக்குறுந்தொகையில், "அன்றுதானரக்கன் கயிலாயத்தைச், சென்று தானெடுக்க வுமையஞ்சலும்" என்று, பேசியவாற்றானுமுணர்க.

ஓடி ஒருவாறு இறையோனிடத் தெழுந்தருளி வெகுளியை விடுத்தேம்.

இது நிற்க; பண்டொரு பகலில், அமரருக்கும் அவுணருக்கும் நேரிட்டபோரில், இரு திறத்தவரினும் பலர்மடிதலால் அவர்கள் பிரமனைச் சத்தியலோகஞ் சென்று கண்டு தலைவா? யாங்களிறவாது நெடுநாள் போர்புரியக் கருதினோமாதலின் பாற்கடலைக் கடைந்து அமுதளிக்கவேண்டும். எனவேண்ட, பதுமன், "கமலை கேள்வன்பாற் கூறிக்கருதியது முடிப்பிப்பேன்" என்றுரைத்து, அவர்களுடன் க்ஷீராப்தியடைந்து, திருமாலை வணங்கி, அவர்கள் விருப்பையறிவிக்க: விஷ்ணுமூர்த்தியதற்கிணங்கி, "அவ்வாறே யாகுக" என்று மந்தரமலையை மத்தாக நட்டுச் சந்திரனை அடைதூணாக்கி, வாசுகியைத் தாம்பாகப்பூட்டி, தேவரொருபுறமும் அசுரர் மறுபுறமும், ஈர்க்கும்படி கட்டளையிட்டு, தாம் கூர்மவடிவேற்று மலையின் அடியையு முடியையும் முதுகினாலுங் கைகளாலும் பற்றிநிற்க, தேவாசுரர் பலகாலங் கடந்தமையால்: வாசுகி வருத்தமாற்றாது உடல் பதைத்து நாத்துடிக்கத் தனது ஆயிரம் வாய்களாலும் விஷத்தைச் சிந்தினன்,

அவ்விஷத்தைக் கண்டு பயமுற்று அவ்விடத்தைவிட்டகன்று, கைலையடைந்து கண்ணுதலிடத்தில் கலக்கமுற்றுத் தங்குறை கூறிநிற்க, நக்கன்: அபயாஸ்தங்கூறி, காளியை யங்கையிலேற்றுத் திருவமுது செய்து, பண்டுபோல் பாற்கடலைக் கடையுங்களென்று உத்தரவு அளிக்க! அவ்வுத்திரவைச் சென்னிமிசை யேற்றுச் சென்று, முன்போல் கடைந்தபோது அமிர்தகடலெழுந்தது. அதுகண்ட தேவரும், அவுணரும் எங்களுக்கெங்களுக்கென்று போர்புரிய, எத்தனித்தார்கள். அவர்கள்

போரை விலக்குவான்வேண்டி, கருடகேதனன: மோகினி வடிவேற்று அசுரர்களை மாயையினால் மயக்கி வஞ்சித்து, சுரர்களுக்கு; அமுதத்தை யீந்து, பாற்கடலி னொருபுறத்திலிருந்தார். அஃதுணர்ந்த; உமது நீலகண்டர் விஷ்ணுவாகிய மோகினியை யிச்சித்துப் பலாத்காரமாய்த் தூக்திக்கொண்டுபோய்ச் சால விருக்ஷத்தின் அடியில்கூடிக் கலந்து, சாளக்கிராமத்தையும்அரிகர புத்திரனென்னும் ஐயனாரையும் பெற்றனர்.

அஃதையறிந்த யாம் இறையோன்மீது ஊடிக்கொண்டொருபுறத்திற் செல்லுங்கால்: உடனே, ஓடிவந்து எமது வலக்கையைப்பற்றி, ஏ! நாயகி? ஏன்! வெகுளி கொள்கின்றாய் எமது மாயா காரிய சம்பந்தத்தால் * நான்கு வகை யுற்றுவிளங்கும் அதுவே; நீயும், திருமாலும், காளியும், துர்க்கையு மென்றறிவை" அதாவது: மனைவியாகையில் நீயும், ஆணுருவாகையில் விஷ்ணுவும், குரோதமுற்ற பொழுது காளியும், யுத்தமுனையில் துர்க்கையுமாக விளங்குவீராதலின், திருமாலும் நீயும் வேறன்று. இதற்காக வெகுளி வேண்டுவதில்லை என்று, பிரார்த்தித்தார். அஃதை யொறுவாறேற்றுச் சீற்றத்தை விலக்கினேம். இப்பொழுது: எமக்குப் பதிலாக, ஒரு சோரமங்கையைச் சடாபாரத்தில் முடித்து வைத்திருக்கின்றார். ஆதலால் யாம் அவண் வருவது நியாயவிரோதம் அப்படியாம் அங்கு வருவேமானால் அவள் எம்மைச் சிறிதும் மதியாள் நீ சொல்லுதி. என, பரவைதுணைவன்: பார்வதியைப் பார்த்து அன்னையே? உமது கொழுநர் உம் நிமித்தமாகக் கங்கையைச் சென்னிமிசை யணிந்தாரே யன்றி, தன்னிச்சையாய் அணியவில்லையே! என, உட

* இந்நான்கு வகையுற்று விளங்குவதை; சங்கர சங்கிதையில்: "ஏகைவசக்தி: பரமேச்வரஸ்யப்ரயோஜ நார்த்தாய சதுர்விதாபூத். போகே பவாநீ புருஷேஷுவிஷ்னு: க்ரோதேசகாளீ சமரே சதுர்க்கா." என்று வருதலைக்கொண்டுணர்க.

னே மலைமகள் சற்றாலோசிக்காமல், உமது சமத்காதி எம்பெரு
ருட்டெதற்காகத் தலைமிசைச் சானவியைத் தரித்தார். என,
முனிந்து வினவ: கையிலையாளி கேளன் காமக்கோட்டியை
நோக்கி;

அன்னையே! போர்கால் நீயு மாறுடன் விளையாட் டென்னி
பின்னையே வந்தி ரண்டு பெருவிழி கரத்தால் மூட
சொன்னவிவ் விரல்கள் பத்தில் தோன்றிய கங்கை தன்னை
மன்னிய வுலக மூழ்கா வண்ணமே தரித்தா ரன்றே.

அஃதாவது; ஒருகால் கைலைக்கடுத்த சிங்கார வனத்தில், சிவ
பெருமான் உல்லாசமாக வுலாவுகையில், தாங்கள் லீலாமாத்தி
ரையாக, ஒன்றுமறியாது பின்வந்து, திருக்கரங்க ளிரண்டி
னாலும், பெருமானது திருவிழிகளை மூடினீர். அதனால்; அள
வில்லாத அண்டகோடிகளிலுள்ள, ஆன்மாக்களெல்லாம் அல்ல
லுற்றழுங்கும்படி அந்தகாரம் நிறைந்தது. தினகரன் வெயிலும்
திங்களின் நிலவுந்தீயின் சுடரும் தேவர் ஒளியும் மற்றெங்கு
முள்ள பிரகாசமு மிறந்து உலகமுழுவதும் பேரிருண் மயமா
யிற்று.

சிவபெருமான்: திருவிழி யொளியால் எல்லாச்சோதியும்
இயங்குந் தன்மையால், தங்களானது கண்களைத் தங்கள் கை
யால் மூடிய கணமொன்றில் உயிர்கட்கு ஊழி பலகழித்தல்
கருதி, கருணைமூர்த்தி மன்னுயிர்த் தொகைகட் கின்னருள் புரி
யத்தன்னுள மதனிலுன்னினராகி, நெற்றியினுப்பண் ணீள்விழி
தோன்றுவித்து, அன்னது கொண்டுலகின் இன்னலை விலக்கி
நீங்கா நிலையாய் நிறைந்த பேரிருளைத் தீர்த்து, திங்கள், செஞ்
சுடர் தீமுதலாய் சுடர்கட்கொளி செய்தனர். எண்ணிறந்த ஆன்
மாக்கள் தத்தம் உண்ணிறைந்த பெருங்களிப்பால், தாணுவை

வழுத்தின. இத்திறச் செய்கையைத் தாங்கள் அறிந்து சித்த மதனில் மெத்தப் பிரமித்து, சகல இணைவிழிமூடிய இருகாத்தையும் இமைப்பொழுதி லெடுத்தீர்கள்: அவ்வாறெடுக்கையில்: தங்களுக்கேற்ற, அச்சத்தால் விரல்கள் பத்திலும் வியர்வு தோன்ற, தாங்கள் கண்ணுற்று கைவிதிர்க்க, பத்துவிரல்களி லிருந்து பிறந்தவை பத்துக் கங்கைகளாகிப் பெருகிச் சத்த சமுத்திரங்கட்கும் வழிகொண்டன.

அவை; நூறு; ஆயிரங்கோடி முதலிய கணக்கில்லாத முக முற்று, மூதுலக முழுவதும் மூடிப் பரவக்கண்டு மோசம்வந்த தென்று இந்திரன் பிரமன் விட்டுணு மூவரும், திருக்கயிலாய கிரியை யடைந்து திரியம்பகனைச் சேவித்து, "தேவதேவா! ஏதோவொரு வெள்ளம் எங்கும் பெருகி எல்லையில்லா திரைந்து யாவையுமழிய, அண்டமுழுவதுங் கவர்ந்தது. அதனை யடக்கி அடியேங்களையும் அகிலத்தையும் அளிக்கவேண்டும்." என்ற றைய, பன்னகாபரணன்: தங்கள் விரலிற் பத்து கங்கைகள் உற்ப வித்ததை யுணர்த்தி உலகைச் சூழ்ந்த, அவ்வெள்ளத்தையுன்னி யழைத்துத் தமது சடையிற் தரித்து உலகுக்கோர் கெடுதியும் நேராவண்ணம் இரக்ஷித்தார். ஆகையால், அக்கங்கையைத் தங்கள் காரணத்தினுல் தரித்தாரே தவிர, அவர்பொருட்டணியவில்லையே? இப்பொழுது அக்கங்கையை விட்டுவிடச் சொன்னு லும் விட்டுவிடச் சித்தமாயிருக்கின்றார். ஆதலால், "நாங்கள் ஐபவீதில் கொண்டிருக்குஞ் சீற்றத்தைத் தவிர்த்து, அண்ணல் சமுகத்திற்கு வருதிர்" என, மரகதவல்லி புன்முறுவல் கொண்டு மோனமுற்றிருந்தனர்.

அதுகண்ட ஆலாலசுந்தரர் அரனிடத்தவளை பிரதக்ஷிணா நமஸ்காரம் பண்ணி நின்று கைகூட்பி;

இறைவியுஞ்பாதமேபோற்றி யென்னையீன்றருள்வாய்போற்றி
மறலியைமுனிந்தாய்போற்றி மகிடனைத்தொலைத்தாய்போற்றி
குறைவிலாநிறைவேபோற்றி கொடும்பகைசிதைத்தாய்போற்றி
யறமிகவளர்த்தாய்போற்றி யன்னையேபோற்றிபோற்றி.

எனப் பலவாறாகத் துதித்து நின்றார். அத்தருண மங்குற்ற, திருமால், பிரமன் முதலிய தேவர்களும், பதினொருகோடி யுருத்திரர்களும் இந்திராதி திக்குப் பாலகர்களும், அஷ்டவசுக்களும் சனகாதி மஹாருஷிகளும், மற்றேனையோர்களும் இறைவியின் பாதத்திலே பன்முறை பணிந்து நின்று;

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

எனப் பலமுறையாகத் துதித்து: அன்னையே! தாங்கள் சகல புவனாதிகட்கும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார திரோபவ அனுக்கிரக மென்னும், பஞ்ச கிருத்தியங்களை, இயற்று மாற்றல் உமக்கேயன்றி வேறெவர்கட்குமில்லை: ஆதலால், "இனிக்கோபத்தைத் தவிர்த்துக் கொன்றைசூடி சமூகத்திற்கு எழுந்தருளிதிர்'' என அம்மையுணர்ந்த விமலை வியர்ப்பை விலக்கி, "ஏ! தேவாதி தேவர்களே! ஏ! எமது மணவாளன் துணைவா? நீங்களனைவோருமெம்முடன் இறையோன் சந்நிதிக்கு எழுந்தருளி வருதிர்'' என, தேவாதி தேவர்களும் ஆலால சுந்தரரும் ஐயையை வணங்கின்று அஞ்சலி புரிந்து துதிசெய்யவும், தேவதுந்துமி முழங்கவும், புட்பமாரி பொழியவும் கௌரி காந்தன் நிலையத்திற்கு வருதலுற்றார்.

உமையாதியோர் நக்கன் சந்நிதிக்கு வருதல்.

மலைமகள்: மணாளன் சந்நிதானத்தி லெழுந்தருளிவணங்கி நின்று, ஆனந்த பாஷ்பஞ் சொரியும்படி கைகுவித்து;

நாயினுங் கடைப் பட்டேனை நன்னெறி காட்டி யாண்டா
யாயிர மரவமார்த்த வமுதனே யமுத மொத்து
நீயுமென் னெஞ்சி னுள்ளே நிலாவினாய் நிலாவி நிற்க
நோயவை சாருமாகி னேக்கினீ யருள் செயாயே.

எண்ணரு முயிரை யீன்றே யவற்றினை யீவாய் போற்றி
யெண்ணரு மண்டபேத மியற்றி வித்தாய் போற்றி
யெண்ணரும் வினையு மெண்ணிப் பலமுறை யீவாய் போற்றி
யெண்ணிரு மூன்றி னாறு மெனவொரு விறைவா போற்றி.

எனப் பலமுறையாகத் துதித்து அனலிலிடப்பட்ட மெழுகு போல் மனங் கசிந்துருகித் தலைவரை மறவாத சிந்தையாய் நின்றார். அதுகண்ட பெருமான் உளமகிழ்ந்து: பெண்ணே! எமது ஒரு சத்தியாகிய நீயே மாயாகாரிய சம்பந்தத்தால் அனேக ரூபமாய் விளங்குகின்றாய். ஆகையால்; நாம் கங்கையைச் சென்னிமிசைத் தாங்கியதற்காக வெகுளி வேண்டுவதில்லை. என்று, லீலாமாத்திரையாகப் பிரார்த்தித்தார்.

உடனே தேவியார் சினந் தணிந்து தேவநாயகராகிய, இறைவரைப் பன்முறை பணிந்து நின்று,

மன்னிய வுலகங் காக்கு மகேசுர வடியாள் செய்த
பின்னிய பிணக்கால் வந்த பிழையினை மனங்கொ ளாது
தன்னிலே வாம பாகத் தலந்தனை முன்பு போல
வென்னுடை வணக்க மேற்றே யீந்துகாத் தருளு வீரே.

எனத் துதிசெய்ய, கண்ணுதல்: அகங் களிகூர்ந்து, "அவ்வாறே ஆகுக" என்று, வாமபாகத்தை யீந்து பண்டுபோல் பக்தாநுக்கிரஹ காரணமாகத் திருவோலக்கமுற்றிருந்தனர்.

அப்பொழுது, ஆலால சுந்தரரும் மற்றுமுள்ள தேவாதி தேவர்களும், ருஷிகளும், முனிவர்களும், உமாமகேஸ்வரரை, அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் புரிந்து நின்று சென்னிமிசை இரு கைகூப்பி;

காசினுக்குத் தந்தையேபோற்றி போற்றி
கடலுலகின் றருடாயே போற்றி போற்றி
பேசுமதன் றனைக்காய்ந்தாய் பெரியோய் போற்றி
பெரியமதனை றணையேவல் கொள்வாய் போற்றி
யேசறவே விடநுகர்ந்தாய் போற்றி போற்றி
யின்னமுத நுகர்தாயே போற்றி போற்றி
தேசுபெறு மகேசரனே போற்றி போற்றி
சீர்திருக் கொநங் களதேவி போற்றி போற்றி.

எனப் பலவாறாகத் துதிசெய்து நின்றனர். அன்பின் வலைப்படு மானார் தேவாதியோர்களுக்கு விரும்பிய வரங்களையும் நாவலூராருக்கு வேண்டிய திரவியங்களையும், அளித்துத் தத்தமிடஞ்செல்ல, ஆஞ்ஞை தந்தனுப்பி ஏகாந்தமாக விருந்தனர். தேவர் முதலியோரும் நம்பியாரூரரும் அவ்வாஞ்ஞையைப் பெற்றுத தம்தம் எதாஸ்தானத்திற் கெழுந்தருளினார்கள்.

இவை நிற்க;

* பின்னர்; பெருங்கருணைப் பெருமாட்டியார் பத்திராச

---

* இதுமுதல் நடைபெறும் சரிதம்; ஏனையவிடங்களில் நிகழாததனாலும், திருவருணையின்கண் மாத்திரம் நிகழ்வதனாலும், ஈண்டுச் சேர்க்கப்பட்டது.

னத்திலிருந்து எழுந்து: இறைவரது இருசாரணாரவிந்தங்களையும் பணிந்து கைகூப்பி நின்று; எம்பெருமானே! நாம் அந்தப்புர மேகுவோம் வருதிர்'' என, பன்னகாபரணன்: பத்தர்களுக்கு முன்னொருகால் தனித்து இக்கால் இன்னருள் புரிவோம் என்ற றதை யுணர்ந்து மோனமா யிருந்தார். அஃதை யுணர்ந்த ஐராணி கடிந்து இறைவரே! ''தாங்கள் மறுமொழி புகலாதிருப் பது யாதோ! நுவலுதிர்'' என, பூதநாதன்: புன்னகைப்புடன் பிராட்டியைப் பார்த்து, பெண்ணே, யாம் பண்டொருகால் பத் தர்களைக் சோணசைலத் தருகாமையில்; மாதவம் பணிதிர்'' அயன் வந்து தனித்தருள் புரிவேம் என்றும்; அப்போழ்து, அருணசலத்தை; ஆன்மாக்களின் வலியைக் குறைத்தற் பொரு ட்டு வலம்வரப் போகின்றேம். என்றும், கிளவினேம் ஆதலால். யாம் செல்லப் போகின்றேம் நீ எம்முடன் இக்கால் வரவேண் டாம் பின்னொருகால் அழைத்துச் செல்கின்றேம்: நீ! நிகேத னத்திற்குச் செல்லுதி என, விமலை வெகுண்டு விடைபுகலாது, அந்தப்புரமேகித் துணைவியர்களை விளித்து;

அங்கணா ரருளிவ் வாறே யறிந்தனஞ் சினந்து வந்தோம்
வங்கண மவர்மாட் டில்லை வாண்மணிக் கதவம்பூட்டி
திங்கள்சேர் முகத்தி னீரே திறந்திடா துரைந்துகாத்து;
வெங்கணார் தமைப்பு ரத்து விட்டிடா தகற்றி டீரே,

எனக் கட்டளையிட்டுக் கலக்கத்துட னிருந்தார்.

* அண்ணல் அருணகிரியை வலம் வருதல்.

பிறகு; தற்பரன் தருமச் செல்வியைத் தவிர்த்து கணங் கள் புடை சூழ, சோன சைலத்தை வலம் வருங்கால், ஆங்

* இது திருவூடல்முடிந்ததும், இரவுகிரிப்பிரதக்ஷிணம் வருங்கால் நடைபெறுஞ் சரிதமென்க.

காங்கு: முன்னர்க் கட்டளைப்படி மாதவம் பயிலும் பண்ணவர்களுக்கு இன்னருள் புரிந்து, கௌதமரிஷி பன்னசாலைக் குகைகாமையில் விளங்கும் வேடுவர்புரி மண்டபத்தில், குறிஞ்சிநிலமாக்களாகிய, கிராதர்களுக்கு அத்திர சத்திராப்பியாசம் பயிற்றுங்கால்: திசைமுகன் தேவேந்திரன் துயரைத் தவிர்ப்பான் வேண்டித் * திலோத்தமை யென்னுங் கனிகையைச் சிருட்டித்து, அந்நங்கையினது பேரழகால் தாமே நீண்டகாலம் மையற்கொண்டு, அவளைப் பின்பற்ற, அவள் தரும நீதிகளைப் புகட்டக் கேளாதது கண்டு உடனே பெண்மானுருவெய்து, நீள, கமலயோனி கலைவுருவெய்து பின்பற்ற, அப்பிணை மிக்க வச்சத்துடன் ஓடி வந்து இன்னருள் புரியும் இறைவர் சமுகத்திலடைக்கலம் புக, கறைமிடற்றவன் கருணை பாலித்துத் தம் கணங்களை வேடுவராகும்படிக் குறிப்பாலுணர்த்தித் தாம் வேடுவத் தலைவராய்நின்று, பிணையின் பின்வருங் கலையினது மோகத்தை விலக்குவான் பொருட்டு, ஞானாத்திரத்தை விடுக்க; அக்கலை மோகம் விலகி வடிவொழிந்து வேதனுகி வேடுவத் தலைவரான விடையோனை நமஸ்கரித்து எழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி;

ஒருதலை யிழந்தேன் மற்றை யுயர்தலை நான்கும் பெற்றேன்
கருதலைப் பூசைக் கோயிற் கண்டிலேனருளாற் கண்டேன்
குருதலை யுடைப்ப நீளவ குழைத்தருள் வண்மை பெற்றேன்
வருதலை யுணரேன்மாயை மருவினேன தெளிவடைந்தேன.

சரண மெம்பிரான் தாண்டவம் புரிமலர் சரணம்
சரண நாயினேன் தமமறத் திடமருட் சரணம்

---

* இத்திலோத்தமையை: சுந்தன், உபசுந்தன என்னும் அசுரரிருவர் செருக்கையடக்குவான் பொருட்டுப் பிரமதேவன் சிருட்டித்தான் என்று பாரதம் நுவல்வதால் கற்பபேதமென் றுணர்க.

சரண மங்கண சாம்பவ சங்கர சரணம்
சரண மென்னையாள் தாயினு மன்பினாய் சரணம்.

என்று பலவாறாகத் துதித்துக் கண்களில் ஆனந்தபாஷ்பஞ் சொரியும், மான்மகனை நோக்கி: மானிடமேந்தி மைந்தா! "அஞ்சற்க" உன் பிழையைப் பொறுத்தேம் ; நீ பண்ணிய பாடலுக்குக் களித்தேம், உன் பதவியை யளித்தேம், "வேண்டிய வரங்களை விளம்புதி" என பிதாமகன்: அண்ணலே! அடியேனுக்கு, "தேவரீர் திருவடிகளில் நீங்காதவன்பை அநுக்கிரகித்தல் வேண்டும்" எனக்கழற, பெருமான்: "அவ்வாறே யாகுக" என, அஃதை யேற்று அணியண்ணமலை யென்னுமிடத்தில் வந்து சிவாகமப்படிச் * சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்தனன்: பிறகு; சிவபெருமான் கிராதக வுருவங்கொண்டு பிரமனாதியோர் புடைசூழ, ஆலயத்திற்கெழுந்தருளி வருதலானார்.

0 அரன் அம்பிகை அந்தப்புரத்திற்கு வருதல்.

பின்னர், பரமன், பார்ப்பதியார் பவனத்திற்குச் சென்று பார்க்கையில், அவள் கபாடமிட் டிருப்பதை யுற்று: கோமாட்டியை விளித்து;

---

* இச்சிவலிங்கம்: தைவிகலிங்க மெனப்படும். இதற்கு; அசிதம் தீப்தம், சூக்குமம், சகச்சிரம் என்னும் நான்கு, ஆகமங்களும் பூசித்தற்கு உரிமையாம். * இப்பிரதிஷ்டை ஆவர்த்தமெனப் பெயர் பெறும் இஃது அன்றியும்; அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என, மூன்று வகைப்படும். இவைகளின் விரிவை: காமிகாகமத்தில் பரக்கக்காண்க ஈண்டு விரிக்கிற்பெருகும். இந்நான்கும் பரார்த்தபிரதிஷ்டை யேயாமென்க பரார்த்தமாவது; சிவபெருமான் மகாசங்காரகாலம்வரையும் சாந்நித்யமாயிருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிப்பதா மென்றுணர்க.

0 இது திருவூடலானமறுதினம் ஆலயத்தினுள் காலையில் நிகழும் அற்புதசரிதம்.

என்னையே நங்கா யிங்கனெ ன்னையே வெறுத்து நீயு
முன்னையே பிணங்கி நின்றாய் முகிழ்நகை யரும்பிக் காட்டி
பின்னையே குலவ லானாய் பெருங்கத வடைத்தா யேனு
நின்னையே விரும்பி னேனை நினைவுற வழைத்திடாயே.

என, அந்தரி: ஐயரே! நீவிரெம்மிடத்து சமாதானமுற்றபின் தனித்து பத்தர்களுக்குக் கிருபைப் பாலிப்பான் பொருட்டும் அருணகிரியை வலம்வரும் பொருட்டும் சென்றீர், அல்லவா! அன்றியும், முன்னொருகால், யாம் இருக்க, எமது அண்ணன், அச்சுதனை மோகினியாகி வரும்படி யுன்னி யழைத்துக்கொண்டு தேவதாரு வனத்திற்கேகி, ஆங்குளோரை மா மாயாவித்தையாய் மருட்டி ஆற்றலை நிலைநாட்டி அன்னார் செருக்கை வீட்டி அக மகிழ்வூட்டி திருவடிகளைக் காட்டி திருநடனஞ் செய்தீர். இவை போன்று, "திருத்தில்லை, திருவாலவாய், திருநெல்வேலி திருக் குற்றாலம், திருத்தளிச்சேரி" முதலாகக் கூறப்படும் பலவிடங்க ளிற் பலகாரணங்களாற் பலமுறை ஆனந்த தாண்டவங்களைச் செய்து; பண்ணவர்களுக்குப் பேரின்பத்தை யூட்டினீர். ஆகை யால்;

இந்துவை முடித்தீர் கேண்மோ விமையவர்க் கன்று காட்டி
தந்திர மதனாலிட்ட தனிப்பெருங் காட்சி யான
நந்திய * கோசு கோட்டி நடனமிட்டிங்கு வாரீர்
புந்தியா லதுமறத்தால் புகவிடேன் திரும்பிச் செல்வீர்.

---

* இக்கோசு கோட்டி நடனத்தைச் சுத்தானந்த பிரகாச பரத நூலில், வெள்ளிடை மலைபோல் விளக்கி யிருக்கின்றது. ஈண்டு; விரிக் கில் விரியுமென்றஞ்சி விடுத்தாம். இதைக் கொடுகொட்டி யென்றும் பெயர் கூறுவர். கொடுக்கொட்டி யென்பது கொடு கொட்டி யென விகாரமாயிற்று. இத்திரு நடனத்தை; திருநாவுக்கரசு நாயனார்: திருவா ரூர், திருக்குறுந்தொகையில்; "கொக்கரை குழல்வீணை கொடு கொட்டி"

என, கண்ணுதல் ஒருவாறு களிப்புற்று; அவ்வாறேயாகுக'' என்று, மாணிக்க வேதிகையின்மேலே, ஞானப்பேரொளி வடிவாயும் திருவடியில் நகரமும், திருவயிற்றில் மகரமும், திருத்தோளில் சிகரமும், திருமுகத்தில் வகரமும், திருமுடியில் யகரமுமாகக்கொண்டு, ஸ்ரீ பஞ்சாக்ஷரமே திருவுருவாயும் நின்று, திருமால் பிரமன் முதலிய கணநாதர்களைக் குறிப்பால் நோக்கியவுடன் நடன சகாயத்தின் பொருட்டு; பிரம விஷ்ணுக்களிருவரும் முறையே தாளமத்தளமடிக்கவும். நாரத முனிவர், தாம் அருளிச்செய்த பஞ்சபாரதீயத்திற் கூறியாங்குப் "பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு'' என்னும், எண்வகைத்தாகிய கலைத்தொழிலால் இசையெழுப்பி, "வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை'' என்னும் எண்வகை இசைக்கரணத்துடன்: "குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்'' என்னும் ஏழிசைகளை, ஆயிர நரம்பினையுடைய "மகதி'' என்னும் வீணையில் மீட்டி * உடற்றொழிற்

என்றும், சுந்தரமூர்த்தி நாயனார் திருமுருகன் பூண்டி, பண். பழம் பஞ்சுரத்தில்; "விட்டிசைப்பன கொக்கரை கொடு கொட்டித் தத்தளகம்'' என்றும், பேசியிருப்பதனாலுமுணர்க.

* இவ்வுடற் றொழிற்குற்றங்களை:—

வயிறது குழியவாங் கலழு முகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரமடுக் குறல் கண்ணூடல்
பயிறறு மிடறு வீங்கல் வடியென வாயங் காத்த
லெயிறது காட்ட லின்ன வுடற்றொழிற் குற்ற மென்ப

என்று, கூறப்படுகிற திருவிளையாடற்புராணத்தாலுணர்க.

குற்றங்களும் ○ பாடற்றொழிற் குற்றங்களும் இல்லாவண்ணம் எழுது சித்திரம்போல் இருந்து வாசிக்கவும்; தும்புரு, கிம்புருடர், விஞ்சையர் மூவரும் முறையே; "மந்தம் மத்திமம் தாரம்" என்னும் மூன்று கதிகளோடே கீதங்களைப் பாடவும், சூரிய சந்திர ரிருவர்களும்; குழலிசையூதவும், பாணுகம்பன் ஆயிரம் வாய்களிலும் சஞ்சலமென்னும் பெயர்பெற்ற, ஆயிரஞ் சங்குகளை வைத்து இரண்டாயிரங் கைகளினாலும் பிடித்துகொண்டு, ஊதவும், வாணசூரன்: ஆயிரங் கைகளாலே குடமுழாவைத் தாக்கவும், நந்திகேசுரரும் கந்தசுவாமியும் காலத்திற்கேற்ற, இராகங்களைப் பாடவும், முனிவர்கள்: கைகொட்டி நெஞ்சநெக்குருகும் வண்ணம் பாடல்களைப்பாடவும், மற்ற கணங்கள்: "தோற்கருவி, தொளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி" முதலியவற்றினோசையை முழக்கவும், எண்டோளன் ஏமாப்புற்று; "அற்புதம், இரௌத்திரம், கருணை, குற்சை, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை, வீரியம்" என்னும் நவரசங்களும்; "வெகுளல் ஐயமுறல், சோம்பல், களித்தல், உவத்தல், அழுக்கறல், இன்புறல், தெய்வமுறல், ஞஞ்ஞையுறல், உடன்படல், உறங்கல், துயிலுணறல், சாதல், மழைபெய்யப்படல், பனித்தலைப்படல், வெயிற்றலைப்படல், நாணமுறல், வருத்தமுறல், கண்ணோவுறல், தலைநோவுறல், அழற்றிறம்படல், சீதமுறல், வெட்பமுறல், நஞ்சுண்டல்" என்னும் இருபத்துநான்கு அபிநயங்களும், விளங்க, வாத்தியங்களுக் கேற்ப, "கோசுகோட்டி" என்னும், நிருத்தனத்தை முன்னும் பின்னும் எதிர் முகமாக, ஆடினார்.

○ இப்பாடற்றொழிற் குற்றங்களை:—

வெள்ளை காகுளி கீழோசை வெடி குறுணி யின்ன
வெள்ளிய வெழாலின் குற்றந் தெரிந்து கின்றிரட் டலெல்லை
தள்ளிய கழிபோக் கோசையினைத் தகெணட்டு யிர்ப்புத்தள்ளித்
துள்ள லென்றின் னபாடற் றொழிற்குற்றம் பிழவுந் தீர்ந்தே.

என்று, பேசப்படுகிற திருவிளையாடற் புராணத்தாலுணர்க.

ஆடுங்கால், தமது தமருகமேந்திய கரத்திலே சிருட்டியையும், அமைந்த அஸ்தத்திலே திதியையும், மழுவேந்திய கையிலே சங்காரத்தையும், முயலகன் முதுகிலூன்றிய திருவடியிலே திரோபவத்தையும், தூக்கிய குஞ்சித பாதத்திலே அனுக்கிரகத்தையும் குறிப்பால் விளக்க; அம்பிகைக்கு அளவில்லாத சிவானந்தம் ஊறி மனசிலே நிரம்பி மேலும் வழிவதுபோலக் கண்ணீர் ததும்ப, நாக்குக்குழற, என்பெல்லாம் நெக்கு நெக்குருக, உரோமஞ் சிலிர்ப்ப, கபாடத்தை திறந்து, இறைவரெதிர் போந்து இருகைகளையுங் குவித்து நின்று;

பராபர முதலே போற்றி பத்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய் நின்றதற் பரனே போற்றி
கராசல வுரியாய் போற்றி கனகவம் பலத்து ளாடு
நிராமய பரமா னந்த நிருத்தனே போற்றி போற்றி.

ஒன்றாகி யைந்தா யையைந் தருவாகி வருவாய் போற்றி
பின்றாகிச் சென்ற நாளா யெதிர்நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீயதாகி நடுவாகி முடியாய் மன்று
ணின்றாடும் பரமானந்த நிருத்தனே போற்றி போற்றி,

எனத்துதி பண்ணினார். பண்ணிய துதிக்குகளித்த பிஞ்சகன் புன்சிரிப்புகொண்டு, கௌரியை நோக்கி நாயகி! "யாது வேண்டினை விரும்பியவற்றைக் கேட்பின் இப்பொழுதே தருவேம்" என, மனோன்மணி மனமகிழ்ச்சியுற்று, நாயகா! "அடியாள் அறியாமையாற்செய்த குற்றங்களைக் குணமாகக்கொண்டு, எக்காலும் நீங்கா வாமபாகத்தையும், அன்பையுந்தருக" என்று, வருந்தி யாசித்து நிற்க, அருட்பெருங்கடல் அவளுக்கு அததகைய பெரும்பேற்றை அநுக்கிரகித்து ஏகாந்தமாய் அடியாருள்ளத்தில் அவாவியவற்றை எண்ணி யாங்கீயும் பொருட்டெழுந்தருளி யிருந்தனர்.

பின்னர், திருமால் பிரமன் முதலிய தேவர்களும், பதினொருகோடி புருத்திரர்களும், இந்திரன் முதலிய வெண்டிசைப் பாலகர்களும், அஷ்டவசுக்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர முனிவர்களும், சநகாதி மகருஷிகளும், நவசித்தர்களும், கருட காந்தர்வ சித்தவித்தியாதர யக்ஷ கின்னர கிம்புருடாதி பதினெண் கணங்களும், தங்கடங்களுக் கிசைந்தவாறு கருணாநிதியை,

ஒருத்திதன் றனைச் சென்றனைக் காதிட்டா னுலகமேத்த
வொருத்திக்கு நல்லனாகி மறுப்படுத் தொளித்து மீண்டே
யொருத்தியைப் பாகம்வைத்தா னுணர்வினு லையமுண்ணி
யொருத்திக்கு நல்லனல்ல னொற்றியூ ருடைய கோவே.

அனைத்துயி ரளித்த வண்ணே யாகினாய் போற்றி போற்றி
நினைத்தவை யளிக்க வல்ல நின்மலா போற்றி போற்றி
வினைத்தொகை யறுக்க வல்ல விமலனே போற்றி போற்றி
தனைத்தரு முமாமகேச தாண்டவா போற்றி போற்றி.

எனப் பாடித்துதித்து, அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் புரிந்து கைகட்டி வாய் பொத்தி நிற்க, மங்கைபாகன்; உம்பராதியோர்களுக்கு விரும்பிய வரங்களையளித்து தத்த மிடஞ் செல்லக் கட்டளை தந்தனுப்பி ஏகாந்தமாக யிருந்தனர். தேவாதியோர் அக்கட்டளையைப் பெற்றுத் தத்த மிடங்களுக் கேகினார்கள். சுபம்.

வாழ்த்து

மழைவ ழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிகச் சைவம் பரக்கவே.

திருவூட லுயிர்களுயச் செய்தருளு மெந்தைதிருக் கருணை வா
மருவூட லளிபுரியு மலர்ச்சோலை யருணைநக ரூழி வாழ்க [ழ்க
கருவூடல் புரிபவத்துக் கடலேறு மடியர்தவங் கலித்து வாழ்க
திருவூட னூல்வாழ்க சைவநெறி யதுவாழ்க சிறந்து மன்னே

"சொற் பொருட் குற்றம் உலகம் பொறுக்க."

திருவூடல் சாரசங்கிரகம்.

முற்றிற்று.

மெய்கண்ட தேவன் மொய்கழல் சரணே.



உ

சிவமயம்.

பிரகடனப் பத்திரிகை.

இந்நூல்

ஆசிரியரால் வெளிவந்த புத்தகங்கள்.

சிவஞானபோதத் தெளிவுரை	0	6	0
நித்தியகருமநெறி திருக்குறள்குறிப்புரை	1	0	0
நித்தியகரும அநுமானோத்தரப்பிரபோதம்	0	4	0
சிவலிங்கப் பிரபாவநிரூபணம்	0	12	0
சுத்தசைவானுட்டானவிதி	0	4	0
சுத்தசைவ வாமசிரார்த்தவிதானம்	0	6	0
அமாவாசியாதி திலோதக தருப்பணவிதி	0	2	0
புண்ணியாக வாசனவிதி	0	4	0
அபரக் கிரியாவிதி	1	0	0
விவாக விதி	0	6	0
மலையாளமாந்திரீக போதனம்	0	12	0
வல்லாளமகாராஜன் பூர்வசரித்திரம்	0	1	0

விலாசம்:—

ம. தி. முருகேச முதலியார்,

புத்தகக்கடை, கூடலூர், ஓ. டி.

தி. பட்டுசாமி ஓதுவார்,

சைவசித்தாந்தசபை,

ஸ்ரீ புருஷமங்கலம்

திருமணி போஸ்டு ஆரணி ஜாகீர்.

தி. வெ. சி. மாணியத்தின செட்டியார்-

திருவண்ணாமலை.

மூன்று விலாசத்தில் யாரிடமாகிலும் பெற்றுக்கொள்ளலாம்.

உ

மகாமகுத்துவம் பொருந்திய கும்பமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

உமாமஹேஸ்வர ஸம்பாஷணையாகிய

ஈஸ்வர நாடிசோதிடம்,

இந்த ஓர் அருமையான சோதிட நூல்

அன்பர்களே!!

உலகில் ஜனனமான மானிடர்கள் வாழ்நாட்களைக் குறித்து சோதிடசாஸ்திரமென்பது சகலருக்கும் தெரிந்தவிஷயம் இவைகளில் பலரபலன்களை உரைக்கும் பலவிதமான சோதிடசாஸ்திரங்கள் வெளிவந்திருப்பினும், உமாமஹேஸ்வர சம்பாஷணைரூபமான "ஈஸ்வரநாடி" என்னும் சோதிடம் இதுவரையிலும் வெளிவராதிருந்தன தற்சமயம் நாங்கள் சில ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு தக்கசோதிடர்களால் சீர்திருத்தப்பெற்று வெளிவந்திருக்கின்றன. இதில்,

பிதுர்காரகனாகிய சூரியகாண்டம்	2 0 0
மாதுர்காரகனாகிய சந்திரகாண்டம்	2 0 0
சகோதரக்காரகனாகிய குஜகாண்டம்	1 8 0
வித்தியாகாரகனாகிய புதகாண்டம்	1 8 0
புத்திரகாரகனாகிய குருகாண்டம்	1 8 0
களத்திரகாரகனாகிய சுக்கிரகாண்டம்	1 8 0
ஆயுள்காரகனாகிய சனிகாண்டம்	1 8 0

ஆகிய சப்தகாண்டங்களும் வசனரூபமாய் அந்த அந்த லக்கனங்களுக்கு சக்கரங்களை ஏற்படுத்தி காண்டம் ஒன்றுக்கு 720-சக்கரங்கள் அமைத்து தற்சமயம் அச்சிட்டு வெளிவந்திருக்கின்றன. 7 - காண்டங்களும் மொத்தமாக வாங்குபவர்களுக்கு விலை ரூபா 7 0 0

எமது விலாசம்:—

டி. ஆர். வெங்கடேச முதலியார்

நெ. 34, முத்துகிருஷ்ணன் தெரு,

மின்ட்பில்டிங்போஸ்ட், மதராஸ்.